# சைவநீதி

வெகுதானிய புரட்டாதி.



உ

சிவமயம்

# சைவ நீதி

## பொருளடக்கம் :

| | | | |
|---|---|---|---|
| 1. | வழிபாடு | ஆசிரியர் | 1 |
| 2. | மகோற்சவங் காண வைத்த ஆலயங்கள். | பண்டிதர் சி. அப்புத்துரை | 2 |
| 3. | சைவ மெய்ஞ்ஞானக் கருவூலம் | பண்டிதர் மு. கந்தையா | 6 |
| 4. | சாணும் வளர்க்க............................ | முருக வே. பரமநாதன் | 13 |
| 5. | குமர குருபரர் | பண்டிதர் ச. சுப்பிரமணியம் | 15 |
| 6. | மேன்மை கொள் சைவ நெறி | வைத்திய கலாநிதி க. வேலாயுதபிள்ளை | 18 |
| 7. | குலச்சிறை நாயனார் | சிவ சண்முகவடிவேல் | 22 |
| 8. | திருவிளையாடற் புராணம்: தடாதகைப் பிராட்டியார் திருமணம் | கூடலான் | 23 |
| 9. | திருவாசகச் சிந்தனை : திருப்பொற்சுண்ணம் | பண்டிதர் சி. அப்புத்துரை | 26 |
| 10. | சனிதுதி | வித்துவான் ச. சிவாநந்தையர் | 28 |

சைவநீதி இதழில் வெளிவரும் கட்டுரைகளிலுள்ள கருத்துக்களுக்குக் கட்டுரை ஆசிரியர்களே பொறுப்பாளிகளாவர்.

– *நிர்வாகம்.*

உ
சிவமயம்
"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

# சைவநீதி

மலர் 2 வெகுதானிய புராட்டாதி சைவசமய வளர்ச்சி கருதி வெளிவரும் மாத இதழ் இதழ் 6

*கௌரவ ஆசிரியர்*
சைவப்புலவர்மணி
வித்துவான்
திரு. வ. செல்லையா

*நிர்வாக ஆசிரியர்*
திரு.செ. நவநீதகுமார்
42. ஜானகி லேன்,
கொழும்பு 04.

*பதிப்பாசிரியர்*
திரு.மு. கௌரிராஜா

## வழிபாடு

*"வணங்கத் தலைவைத்து வார் கழல் வாய் வாழ்த்த வைத்து*
*இணங்கச் சீரடியார் கூட்டமும் வைத்து"*

என்பர் மணிவாசகர். இந்தப் பிறவி பெற்றதன் பயன் இறைவனை வழிபட்டுப் பயன் பெறுவதேயாம். எறும்பு முதல் யானை யீறான ஜீவராசிகள் இறைவனை வழிபட்டு உய்ந்திருக்கும் போது நாம் இதை உணராது இருக்கின்றோம்.

யானை வழிபட்டதலம் திருவானைக்கா. குரங்கு வழிபட்ட தலம் குரங்காடுதுறை. மயில் வழிபட்ட தலம் மயிலாடுதுறை. எறும்பு வழிபட்ட தலம் திரு எறும்பியூர்.

இறைவனை வழிபடும் போது பூவும் நீரும் கொண்டு வழிபட வேண்டும். "சலம் பூவொடு தூப மறந்தறியேன்" என்பர் அப்பரடிகள். பூக்கிடைக்காத போது எங்கும் கிடைக்கும் பத்திரங் கொண்டாவது வணங்க வேண்டும். "யாவர்க்குமாம் இறைவற்கொரு பச்சிலை" என்கிறது திருமந்திரம்.

நல்லாரிணக்கமும், நின்பூசை நேசமும் ஞானமும் அல்லாதன வெல்லாம் வெளி மயக்கு. மலர்கள் தூவி, நாவார, இறைவன் நாமம் பாடி இறைவனை வழிபடாத பிறவியாற் பயன் இல்லை.

*பூக்கை கொண்டரன் பொன்னடி போற்றிலர்*
*நாக்கை கொண்டரன் நாமம் நவில்கிலர்*
*ஆக்கைக்கேயிரை தேடி யலமந்து*
*காக்கைக் கேயிரை யாகிக் கழிவரே.*

# மகோற்சவங் காண வைத்த ஆலயங்கள்

– பண்டிதர் : சி. அப்புத்துரை –

## யாழ். தெல்லிப்பளை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்:

> துர்க்கை அம்மனைத் தொழுதா லென்றுந் துன்பம் பறந்தோடும்.

**யாழ்** தெல்லிப்பளை அருள்மிகு துர்க்காதேவி தேவஸ்தானத் தேர்த் திருவிழா கடந்த 1998 . 09. 03 வியாழக்கிழமை நடைபெற்றது. சனசமுத்திரத்தின் நடுவே அம்பாள் தேரில் உலாவந்த காட்சியைக் காண, "நாலாயிரம் கண் படைத்திலனே" என்று பாடியவர் போன்றவொரு புலமையாளன் கண்டிருந்தால் நாப்பதினாயிரம் கண் படைதிலனே என்று நொந்திருப்பார். பலவித தாக்கங்களையும் அனுபவித்த மக்கள் வெள்ளம், உணர்ச்சி வெள்ளத்தில் தோய்ந்து நின்ற நிலை எண்ணிப் பார்க்க முடியாதது. எல்லாவற்றுக்கும் மேலாகச் சிவத்தமிழ்ச் செல்வி அவர்களின் உருக்கமான வர்ணனை எல்லோர் மனதையும் தொட்டுப் பிழிந்தெடுத்தது. நொந்து போயிருந்த உள்ளங்களுக்கு அற்புதமானதொரு ஜீவாமிர்தம்.

சமீப காலத்திய அனர்த்தங்களின் பின் புனரமைப்பு வேலைகள் நிறைவாக்கப்பட்டு 1997 .09.01 இற் கும்பாபிஷேகங் கண்டது. "மீண்டுந் தொடங்கும் மிடுக்கு" என்று எங்கள் மஹாகவி சொன்ன கருத்தின் பிரதிபலிப்பாக இந்த ஆலயத்தின் வேலைகள் வளர்ந்து கொண்டிருக்கின்றன. "இந்த மாநிலம் பயனுற வாழ்வதற்கான வல்லமையை இறைவனிடம் வேண்டித் திருக் கோயில்களுக் கூடாகச் சமூகப் பணியாற்ற முன் வருவோம்", என்று கோகிலா மகேந்திரன் அவர்கள் எழுதியுள்ள கருத்தை முன்கூட்டியே செயலாக்கிக் கொண்டிருப்பது துர்க்காதேவி தேவஸ்தானம்.

இதே தேர்த்திருவிழாவன்று தேரிற் பவனி வரும் மயிலிட்டிக் கொழுவியன் கலட்டி விநாயகனை நினைந்து வணங்குவோம்.

# முன்னேஸ்வரம் முன்னை நாதேஸ்வரர் ஆலயம்:

முன்னேஸ்வரம் முன்னைநாதேஸ்வரர் தேர்த்திருவிழா கடந்த 1998. 09. 05 சனிக்கிழமை நடைபெற்றது. பழம் பெருமை வாய்ந்த இந்த ஆலயத் தேர்த் திருவிழாவிற் பக்தர் கூட்டம் மிகப் பெரியதாக இருந்தது. இலங்கையின் வடமேற்குப் பகுதியிற் சிலாபம் நகரில் இந்த ஆலயம் அமைந்துள்ளது. வடிவாம்பிகை சமேத முன்னை நாதேஸ்வரர் ஆலயம் மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் மூன்று விசேடங்களையும் பெற்றது. தீர்த்தம் மாயவனாறு (தெதுரு ஓயா).

*குளக்கோட்டு மன்னன், ஆறாம் பராக்கிரமவாகு, ஒன்பதாம் பராக்கிரமவாகு, கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன் என்போரும் வழிபட்டுத் திருப்பணி செய்த ஆலயம்.*

இராமர் வியாசர் முதலானோரும், வேறு பல முனிவர்களும் இந்த ஆலயத்தை வழிபட்டதாக தக்ஷிண கைலாய புராணங் கூறுகின்றது. இராம பிரான் இலங்கை வந்து இராவணனைச் சங்காரம் செய்த பொழுது அவரைப் பிரமகத்தி பிடித்தது. அவர் சீதாபிராட்டியரோடும் பரிவாரங்களுடனும் மீண்டு கொண்டிந்த வேளை முன்னேஸ்வரத்தைச் சமீபித்தவுடன் சாயா ரூபமான பிரமகத்தி தன்னை விட்டகல்வதை உணாந்து, அதனை ஆராய்ந்த பொழுது, சோதி மயமான உன்னத கோபுரம் தீர்த்தம், நந்தவனம் முதலானவற்றுடன் விளங்குகின்ற ஸ்ரீ முன்னேஸ்வரத்தைக் கண்டு விமானத்தைப் பூமியில் இறக்கி அங்குள்ள சிவதீர்த்தத்திற் சீதாபிராட்டியோடும் விதிப்படி ஸ்நானஞ் செய்து கோயிலுட் சென்று முன்னை நாதேஸ்வரரையும் வடிவாம் பிகையையும் பூசித்தார். பரமேஸ்வரன் அவ்விடத்துக் காட்சி கொடுத்து இராமபிரானைப் பிடித்த பிரமகத்தி முழுமையாக நீங்கும் பொருட்டு இலங்காபுரியில் முன்னேஸ்வரம், கேதீஸ்வரம், கோணேஸ்வரம் என்னுந் தலங்களிலும் சேதுக்கரையிலும் ஒவ்வோர் சிவலிங்கம் பிரதிட்டை செய்யுமாறு திருவாய் மலர்ந்தருளினார். அத்துடன் மாயவனாற்றுக்கு வடபாகத்தில் மானாவாரி என்னும் இடத்தில் இராமலிங்கம் என்னும் பெயருடன் சுவர்ணலிங்கம் ஒன்றைப் பிரதிட்டை செய்து வணங்கினார். இறைவன் திருவருட் குறிப்பின்படி ஏனைய இடங்களிலும் பிரதிட்டை செய்து வழிபட்டாரெனத் தக்ஷிண கைலாயபுராணம் கூறுகின்றது. வேறு வரலாறுகளும் உண்டு.

# யாழ் தொண்டமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலயம்.

யாழ் தொண்டமானாறு செல்வச்சந்நிதி முருகன் தேர்த் திருவிழா கடந்த 1998 . 09. 05 சனிக்கிழமை நடை பெற்றது. போக்கு வரவு வசதியீனங்களிடையே பக்தர்கள் வருகைக்குக் குறைவேயில்லை. பலவழியிலும் நொந்த உள்ளங்களுடன் எல்லை கடந்து நின்றது மக்கள் கூட்டம். துன்பத்தின் எல்லையைக் கடந்த மக்கள் ஆதலிற் சலனம் இன்றி வழிபாடு செய்து கொண்டிருந்தனர். இந்த ஆண்டு நடைபெற்ற தேர்த்திருவிழா வழிபாடு மிகப் புனிதமான பக்தியொடு கூடிய வழிபாடு என்று கூறுவது பொருத்தம்

"இறைவன் முன்பாக" என்பதைத் "தெய்வ சந்நிதியில்" என்று 'நாம் சாதாரணமாக உரையாடும்

போ பா   ஆத குறிப்பிடுவோம். இங்கே ஆலயத்தின் பெயரே செல்வச்சந்நிதி என்று அமைத்து விட்டது. செல்வச்சந்நிதி ஆலயச் சூழலில் மடங்கள் பலவாக அமைந்துள்ளன. அந்த மடங்களில் அன்னதானம் நிகழ்வது சர்வ சாதாரணம். ஆலய உற்சவ காலங்களில், எல்லா மடங்களிலும், ஒவ்வொரு நாளும் அன்னதானம் நடைபெறுவது வழக்கம். அதனாலேயோ என்னவோ சந்நிதி முருகனை அன்னதானக் கந்தன் என்பர்.

அண்டியோரை அரவணைக்கும் அன்னதானக் கந்தன்

அந்தணர் அல்லாதோரே இந்த ஆலயத்தின் அர்ச்சகர்களாகப் பணிபுரிகின்றனர். ஆலயத்து உரிமையாளர்கள் என்று கருதப்படும் ஒரு குடும்ப உறுப்பினர்கள் பரம்பரை பரம்பரையாகப் பூசை செய்கின்றனர். பூசகர் மந்திரங்களை உச்சரிப்பதில்லை. தூய துணியினால் வாயை மூடிக் கொள்வர். அதனால் வாய்க்கட்டிப் பூசை செய்கின்றனர் என்பர்.

இங்கு சித்தர்கள் பலர் வாழ்ந்து சமாதியாயினர் என்ற கருத்தும் உண்டு. அதனாலேதான் இந்த ஆலயச் சூழலில் ஒரு புனிதமான ஆனந்த நிலையை அனுபவிக்கின்றோம் போலும். ஈழத்தில் முருகனுறை தலங்களுள் செல்வச் சந்நிதி மிகச் சிறப்பு வாய்ந்ததொன்று என்று துணிந்து கூறலாம்.

## யாழ் கொக்குவில். மஞ்சவனப்பதி முருகன் ஆலயம்:

இலங்கையில் தேர்களில் மிக உயரமானதும் அகலமானதுமான தேர் கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலயத் தேர் என்று பலர் பேசுவதைக் கேட்க முடிந்தது. அந்த ஆலயத்தின் தேர்த் திருவிழா கடந்த 1998. 09. 05 ஆந்தேதி இடம் பெற்றது. பக்தியுடன் வழிபடும் பெரியதொரு மக்கள் கூட்டத்தினை அன்று அங்கே பார்க்க முடிந்தது. அழகியதொரு சூழலில் இந்த ஆலயம் அமைந்துளது. கோயிலின் முன்பகுதியில் தண்ணளி தரும் அருமந்த சோலையைக் காண்போம். நல்லதொரு பூந்தோட்டம் ஆலயத்தின் தென்பகுதியை அழகு செய்கின்றது. இந்த ஆலயத்தின் பூங்காவனத் திருவிழா இயற்கையாக அமைவதற்கு இந்தப் பூந்தோட்டம் உதவுவதாக உள்ளது.

ஈழத்தின் வடபகுதியிற் கலை ஆட்சி புரிவதொரு சூழலில் இந்த முருகன் ஆலயம் அமைந்துள்ளமை பெருமைக்குரியது. ஆலயச் சூழலில் அமைந்துள்ள பரதநாட்டியக் கல்லூரியாய கலாபவன ஆசிரியர், பரதக்கலைஞர் சுப்பையா அவர்களும், சங்கீத வித்துவான் குப்பிழான் செல்லத்துரை அவர்களும், இசையரசி சரஸ்வதி பாக்கியராசா அவர்களும், ஏனையதுறை சார்ந்த விற்பன்னர்களும் பயின்றமையாற் பெருமை பெற்றது கொக்குவில். சுன்னாகம் முத்துக்குமார கவிராயர் மாவை முருகன் மீது பாடிய தனிப்பாடலொன்றில், "முடிவிலாதுறை சுன்னாகத்தான் வழி முந்தித் தாவடி கொக்குவில் மீதுவந் . திவர" என்று கொக்குவில் என்ற ஊர்ப் பெயரை முருக பிரபாவத்துடன்

உபயோகித்திருப்பது மகிழ்ச்சிக்குரியது. கொக்குவில், குதிரை, திருமுருக கிருபானந்தவாரியார் ஒரு பிரசங்கத்திற் குறிப்பிட்ட இராஜகோபுரம் அமைய இன்னும் திருவருள் அநுகூலமாகவில்லை.

# கொழும்பு கப்பித்தாவத்தை அருள்மிகு கருணா கடாக்ஷ அம்பிகை உடனுறை அருள்மிகு கைலாசநாத சுவாமி தேவஸ்தானம்.

இலங்கையின் புண்ணிய பூமி என்று சிந்திக்கப்படக் கூடியது கொழும்பு மாநகர். கொச்சிக்கடை பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயம், முகத்துவாரம் சிவன் கோயில், கொட்டாஞ்சேனை வரதராஜ விநாயகர் ஆலயம், பம்பலப்பிட்டி மாணிக்க விநாயகர் ஆலயம், முகத்துவாரம் பிள்ளையார் கோயில், செட்டியார் தெரு விநாயகர் ஆலயம், பம்பலப்பிட்டி புதிய கதிரேசர் ஆலயம், பம்பலப்பிட்டி பழைய கதிரேசன் ஆலயம், செட்டியார் தெரு புதிய கதிரேசன் ஆலயம், செட்டியார் தெரு பழைய கதிரேசன் ஆலயம், கொட்டாஞ்சேனை முத்துமாரியம்பாள் ஆலயம், வெள்ளவத்தை மயூரபதி பத்திரகாளி அம்பாள் ஆலயம், என்று எங்கு பார்த்தாலும் சிவாலயங்களால் நிறைந்து பொலிவுறுவது கொழும்பு மாநகர். அவ்வண்ணமாகிச் சிவப் பொலிவுடன் விளங்கும் பட்டினத்தின் மருதானை கப்பித்தாவத்தை என்னும் பகுதியில் எழுந்தருளி அருள் சுரப்பவர் ஸ்ரீ கருணா கடாக்ஷ அம்பிகை உடனுறை ஸ்ரீ கைலாசநாதர் ஆவர். ஸ்ரீ கைலாசநாத சுவாமி தேவஸ்தானத் தேர்த் திருவிழா கடந்த 1998 . 09. 07 திங்களன்று கோலாகலமாக நடைபெற்றது.

மக்கள் வெள்ளம் கைலாசநாதரின் அருள் வெள்ளத்தில் தோய்ந்தது. மாயா மலங்களை நீக்கும் அருட்சக்தியாகிய அன்னைக்கு இந்த ஆண்டு புதிதாக ஒரு தேர் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. சண்டேஸ்வரர் தேருடன் இந்த ஆண்டு மூன்று தேர்கள் பவனி வந்தன.

1783 இல் இந்த ஆலய வழிபாட்டு முயற்சிகள் ஆரம்பித்துள்ளன என்று தெரிகிறது. வணிக வைசியகுல வம்சாவழித் தோன்றல்களாகிய திரு விளங்க நகரத்தினரான செட்டியார் வம்சத்தினரால் தொடர்ந்து பரிபாலனஞ் செய்யப்படுவது இந்த ஆலயம். பல்லாண்டு காலமாக இந்த ஆலயத்திற்கு இராஜகோபுரம் இருக்கவில்லை. திருவிளங்க நகரச் செட்டியார் வம்சந்தினரைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இக்காலச் சந்ததியினர் அந்தக் குறையை நிறைவு செய்துள்ளனர். நூற்றொரு அடி உயரமான இராஜ கோபுரத்திற்கான கும்பாபிஷேகமும் நிறை வெய்தியுள்ளது. தொடர்ந்து மகோற்சவமும் நடை பெறுகின்றது.

# சைவ மெய்ஞ்ஞானக் கருவூலம்

– பண்டிதர் மு. கந்தையா –

செந்தமிழ்ச் சைவச் சிந்தனைச் செல்வர்க்கு:

“சைவ சமயமே சமயம்” என்றார் தாயுமான சுவாமிகள். “மேன்மை கொள் சைவநீதி” என்றார் கச்சியப்ப சிவாச்சாரிய சுவாமிகள். “சைவமாம் சமயஞ் சாரும் ஊழ்பெறல் அரிது “ என்றார் அருணந்தி சிவாச்சாரியர். “சைவத்தின் மேற் சமயம் வேறில்லை” என்றார் சைவ எல்லப்ப நாவலர். துறை தோய்ந்த மெய்ஞ்ஞான பாரம்பரியத்தினரான இவர்கள் நால்வரும் இப்படி இசைத்ததற்குக் காரணமான அதன் ய்தார்த்தம் அறியத்தருவது,. சைவ நன்மக்கள் அறிந்தே ஆக வேண்டுவது.

> *சைவக் கலாசாரங்களை அழிக்க முயலுவோரை எதிர்த்து அழிக்கச் சைவர்களது சிவசேனை காலதாமதமின்றி உருவாக வேண்டியது அவசியம்.*
>
> *மகாராஜ ஸ்ரீ சு. து. சண்முகநாதக் குருக்கள்*
>
> *மாவைக் கந்தன் ஆலயப் பிரதம குருவும் ஆதீன முதல்வரும்*
>
> *(தினக்குரல் : 1998 .09. 13 பக்கம் : 10)*

சைவம் என்ற பெயர் சிவனுடன் சம்பந்தம் என்ற பொருளில் நிற்பதாகத் திருமூலர் திருமந்திர மூலம் தெரிவித்த பிரகடனம் பிரசித்தமான ஒன்று. சம்பந்தம் என்றால் எதன் சம்பந்தம் என்ற வினாவுக்கு இடமுண்டு. ஒரு பொருளுடன் இனத்தால் ஒத்த மற்றொரு பொருளுக்கே சம்பந்தம் இருக்க முடியும். உள் பொருள்களில் சிவனும் ஆத்மாவுமே சித்துப் பொருட்கள் என இனத்தால் ஒத்தவை. இதனால் ஆத்மாசிவத்துடன் சம்பந்தமாதலே இங்குக் குறித்த சம்பந்தமாம்.

இவ்விரண்டும் புலக்காட்சிக்கு அகப்பட வாராத பொருள்கள் ஆதலின் இவற்றின் சம்பந்தம் சாதாரண அறிவு விளக்கில் தரிசனமாதல் இல்லை. ஆனால் அருவப் பொருளியற் புகழையும் துலாம்பரமாகக் காட்டும் சைவ சித்தாந்த ஞான விளக்கில் அது தரிசனமாதல் தப்பாது. அவ்விளக்கில் அதனைத் தரிசித்து உலக உபகாரமாகத் தெரிவித்தவர்களே மேற்குறித்த நால்வருமாம்.

சைவ சித்தாந்த நோக்கின் படியான ஆத்மாவின் முழுமை வரலாற்றில் மூன்று நிலைகள் உள. மூன்றினுள்ளும் முதலானதாக உள்ளது கேவலநிலை. அது, ஆன்மா சிவனால் தநு, கரண, புவன, போகம் என்பன கொடுக்கப் பெற்று மீள் பிறப்புப் (புனருற்பவம்) பெறுதற்கு முந்திய நிலை. கேவலம் – தனிமை. கேவலநிலை தனிமை நிலை. தனக்கியல்பான ஆணவமுந் தானுமாய் ஆன்மா இருக்குந் தனிமை நிலை கேவலநிலை. காட்சி

அடிப்படையிலும் அது கேவலமான தனிமை நிலை, உணர்ச்சி அடிப்படையிலும் அது கேவலமான தனிமை நிலை. இவ்விரண்டு அடிப்படைகளையும் ஒரு சேரப் புலப்படுத்தும் தாயுமான சுவாமிகள்.

"காரிட்ட ஆணவக் கருவறையில் அறிவற்ற
கண்ணிலாக் குழவியைப் போல் கட்டுண்டிருந்த நிலை"

என வர்ணித்துள்ளார்.

குழவி – குழந்தை, அதுவும் கண்ணிலாக் குழந்தை, அம்மட்டிலுமல்லாமல் "ஆணவக் கருவறையில்" விடப்பட்ட குழந்தை, அதாவது இருட்டறையிற் குருட்டுக் குழந்தை, போதாக் குறைக்குக் "கட்டுண்டிருந்த குழந்தை" என்றால் பேரப் பிரிய ஆட அசைய லாயக்கற்றிருந்த குழந்தை, என்னே குறித்த காலக் கேவலத்தின் கேவலம் இருந்தவாறு.

இக் கேவல நிலையிலும் அதன் கேவலத்தைப் பார்த்திரங்கி ஏற்குமளவில் அதற்கு விமோசனமளிக்க அதனுடனாய் இருந்தவர் சிவன். இச்சம்பந்தம் ஆத்மாவுக்குச் சிவனுடன் ஆன அநாதிசம்பந்தம் ஆகும்.

இக்கட்டதிற் சிவன் ஆத்மாவுக்குச் செய்யும் விமோசன உபகாரம் இரு கட்டங்களில் அமைகிறது. கண்ணில்லாமல் கஷ்டமுறும் ஆத்மாவின் குருட்டுத் தனத்தைச் சற்றே விலக்க உதவுவது முதற் கட்டம். ஆன்மாவில் ஒரோரளவு இயல்பாகவே இருக்கும் அறிவு, இச்சை, செயல் என்பவை ஆணவத்தின் அதிக்கிரமத்தால் மூடமாக்கப்பட்டிருக்கும் மறைப்பு நிலையே இங்குக் குருட்டுத் தன்மை ஆவது. சிவனே ஆனாலும் அறிவியல் ரீதிக்கும் ஒத்த விதத்தில் உரிய சாதனங்கள் அல்லது கருவிகள் மூலமே காரியங்களைச் சாதிப்பர் என்பர். அதற்கிணங்க ஆத்மாவின் அறிவு மூடத்தை விலக்க வித்தை என்ற ஒரு கருவியும், இச்சை மூடத்தை விலக்க அராகம் என்ற ஒரு கருவியும், செயல் மூடத்தை விலக்கக் கலை என்ற ஒரு கருவியும் தத்துவக் கருவிகளாக மாயையிலிருந்து படைத்து இறைவனாற் சேர்க்கப்படுகின்றன. இது இக் கேவல நிலையில் முதற்கட்ட உபகாரம் ஆகிறது.

சைவாலயங்களிற் பிரதிஷ்டைத் தினத்திற்கு முன் பிரதிஷ்டைக்குரிய விக்கிரகத்திற்கு "நயன உன் மீலனம்" என்ற பெயரில் கண்திறத்தல் கிரியை நடை பெறுதல் பிரசித்தம். அது ஆன்மாவுக்குச் சிவன் அறிவிச்சை செயல்களாகிய கண்களைத் திறக்கும் கேவலநிலை உபகாரத்தை அறிகுறி மாத்திரையாகக் கண்டு வழிபடவைக்கும் உபாயமாம். சைவாலயம் சம்பந்தப்பட்ட சகல கிரியை வழிபாட்டம்சங்களும் சைவஞான உண்மைகளை மக்கள் பொருத்தமான அறிகுறி வடிவில் கண்டு வணங்கி உபாசித்து வருதல் மூலம் அவை குறிக்கும். பொருள் விளக்கத்தை உணர்ந்து கொள்ள வைக்கும் உயர் சாதனங்கள் என்பதும் இத் தொடர்பில் நினைக்கத்தகும். வழிபாட்டு முறையால் உண்மைகளை உணரவைக்கும் தந்திரம் சைவத்திற்குத் தனிச் சிறப்பாகும். "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" எனக் காட்டி, தெய்வம் என்ற பொருளுணர்வு, மக்கள் பெற்றோரை வழிபட்டு வருதல் மூலம் வந்தாக வேண்டும் என்பது சைவநிலை. இது அதற்குதாரணமாதல் அமையும்.

மேற்காட்டிய சிவன் உபகாரத்தினால் தனது அறிவிச்சைச் செயல்கள் சற்றே வெளிக்கப் பெற்ற ஆத்மா மேல், அறிதல், இரசித்தல், செயல்புரிதல் என்பவற்றில் ஈடுபடுவதற்கு ஆதார சாதனங்களும் வேறு வேண்டப்படுகின்றன. ஆத்மா தான் தங்கியிருந்து அவற்றைச் செய்தற்கிடமான உடம்பு, செயற்கருவிகளான கரணங்கள், இவற்றோடு கூடி வசித்தற்குரிய உலகம், இவற்றோடு ஆத்மா உலகத்தில் வசித்திருந்து இயற்றும் செயல்களுக்கான அநுபவங்கள் என்ற நான்கையும் மாயையின் ஒரு

பகுதியிலிருந்து படைத்துக் கேவல நிலையிலிருக்கும் ஆத்மாவுக்குச் சேர்த்து வைத்தலுஞ் சிவன் செயலாம். இவை நான்கும் முறையே தநு, கரண, புவனம், போகம் எனச் சைவ சித்தாந்த பரிபாஷயிற் கூறப்படும். இங்ஙனம் இவற்றை ஆன்மாவுக்குச் சேர்த்து அதை வாழவைத்தல் கேவலநிலையிற் சிவன் ஆன்மாவுக்கு உபகரிக்கும் இரண்டாங் கட்ட உபகாரமாகும். இந்நிலையில் ஆத்மாவுக்குச் சிவனுடன் சம்பந்தம் இருத்தல் பற்றிய விளக்கம் இவ்வாற்றான் அமையும்.

இனி இருட்டறையிற் குருட்டு குழந்தையாய்க் கேவல நிலையிலிருந்த ஆன்மாவுக்கு அதன் அறிவிச்சை, செயல்களாகிய கண்களைச் சற்றே திறந்து மேலும் தநு, கரண, புவன, போகங்களைச் சிவன் உதவும் வாய்ப்பினால், அது பல பல உலகங்களிலும், பலபல யோனிகளிலும் மாறி மாறிப் பிறந்து வாழ்ந்து, இறந்து மீளவும் அப்படியே பிறந்து வாழ்ந்து இறந்து எண்ணற்ற தடவைகளாக உழன்று வருகின்றது. "எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்" என்ற திருவாசகம் ஆத்மா எடுக்கும் பிறப்பின் அளவின்மையையும், அப் பிறப்புகளிற் சம்பந்த முற்று ஆன்மாவானது பட்டுக் கெட்டலையு அலுப்பின் கனதியையும் பிரகடனப்படுத்தியிருந்தல் பகிரங்கம். இந்த நிலை சகலநிலை. சகலநிலை என்றாற் கலை முதலிய தத்துவங்களோடு கூடி அவற்றின் உபகாரத்தால் ஆன்மா வாழும் நிலை. முழுமை வரலாற்றில் இது இரண்டாவது நிலையாம். இந் நிலையில் அறிவு சற்றே வெளித்திருத்தலால் ஆத்மா தானே அறிவதாக உணரும். இச்சை சற்றே வெளித்திருப்பதால் தானே இச்சிப்பதாக எண்ணும். செயற் கண் சற்றே வெளித்திருப்பதால் தானே செயலாற்றுவதாக நினைக்கும். ஆனால், உண்மை நோக்கில் அது எல்லாவற்றையும் அறிவதுமில்லை; அறியும் ஒரு விஷயத்திலும் அதை முழுமையாக அறிவதுமில்லை, தான் இச்சிப்பவற்றைத் திருப்பிக் காண்பதுமில்லை; நினைக்கும் எல்லாவற்றையும் அது செய்ய முடிவதுமில்லை; செய்து முடிப்பதுமில்லை; செய்யுஞ்சிலவற்றைத் தானும் கடைபோகச் செய்வதுமில்லை. "பிள்ளையார் பிடிக்கக் குரங்காய் முடிந்தது" என்ற பழமொழிக்கிணங்க நடந்தொழிவனவும் ஏராளம். இத்தன்மைகளால் நமதென்று நாம் எண்ணும் அறிவிச்சைச் செயல்கள் நமதளவில் உள்ளன அன்று என்ற இரகசியம் வெளியாகி விடுகின்றது. எனவே ஒவ்வொருவர் அறிவிச்சைச் செயல்களின் பின்னணியிலும் அவரவர் அறியாவிதத்தில் முழுமையுற்ற அறிவிச்சைச் செயல்கள் உள்ளவராகிய சிவன் இருந்து இயக்கிக் கொண்டிருந்தல் சைவஞானிகள் எல்லோராலும் ஒத்துக் கொள்ளப்பட்டதாயிற்று. காணப்படாத பொருளாதலால் இவற்றின் பின்னணியிற் கடவுளிருப்பை ஒத்துக் கொள்வோம் எனச் சொல்லி வந்த பௌதிக விஞ்ஞானிகளும் இன்று இவ்வுண்மையைச் சூசகமாக வெளியிடுகின்றனர். பௌதிக விஞ்ஞானம் இனஞ் சுட்டாமற் பொதுவில் ஏதோ (Something) என்கின்றது. சைவம் தெட்டத் தெளிவாக அது சிவன் எனத் தெரிவித்துக் கூறுகின்றது. தெய்வ நம்பிக்கை உள்ள பிற சமயங்களும் தத்தமக்கேற்ற வகையில், அவற்றுக்குரிய தலைவர் பெயரிற் சார்த்தி இவ்வுண்மையை ஏற்கின்றன. ஆனால் அச்சமயங்கள் கொள்கை அளவில் இதனை ஏற்பனவாயிருக்கச் சைவஞானம் முன் பின்னான ஆன்ம வரலாற்றியையுக்கேற்கும் வகையில் இவ்வுண்மையின் இரகசியத்தை வெளிப்படுத்தும்.

அதாவது கேவல நிலையில் உடனாயிருந்து அந்நிலைக்கேற்ப உயிருக்கு உபகரித்து வந்த சிவமே இச்சகல நிலையிலும் உடனாக உள்ளிருந்து உபகரிக்கிறது. (காண்பார் ஆர் கண்ணுதலாய் காட்டாக் காலே" என்ற அப்பர் தேவாரமும் "அறிவிக்க அன்றி அறியா உளங்கள்" (ஆத்மாக்கள்) என்ற சிவஞான போதமும் இதனையே தெரிவிக்கின்றன.) அதுவும் தன் இருப்பு உயிருக்குத் தோன்றாவண்ணம் இருந்து கொண்டே எல்லாஞ் செய்விக்கிறது. எனக் காட்டுதலாம். (தோன்றாத் துணை என்ற வழக்கு இதைச் சுட்டியே எழுந்ததாகும்.) அது தன்னைத்

தோற்றா நிலையிலிருந்து கொண்டே உபகரிப்பதேன்? என்பதற்கும் இருக்கவே இருக்கிறது பொருத்தமான விளக்கம் ஒன்று.

இயல்பாகவே ஆணவ முனைப்போடு கூடியது ஆத்மா. அது சிவப்பேறாகிய உய்தி கூடுதற்கு ஏகப்பட்ட தடையாயுள்ளது அந்த முனைப்பொன்றே. அதனைத் தேய்த்தற் குபாயமும் தன்னிட்டமான அதன் செயற்பாடொன்றே. அதாவது தன் முனைப்பான வினையீட்டங்களாற் பிறவிகளைப் பெருக்கும் செயற்பாடொன்றே. அச்செயற்பாட்டினால் அது மாறி மாறிப் பிறப்புகளை எடுத்து உழன்று தன்னில் தானாகப் பட்டுப் படிக்கும். அநுபவம் வந்தாகும். அந்த அநுபவமான அலுப்பும், உவர்ப்பும் மாத்திரமே இம்முனைப்பைத் தேய்த்தழிக்க முடியும். அது அவ்வாறாதல், வண்டிச் சில்லுகள் உருள உருள அவற்றுக்காதாரமாயிருந்த அச்சுத் தேய்தலிலிருந்து அநுமானிக்கப்படும். இப்பேறு விளைந்தாக வேண்டிய கட்டத்தில் சிவன் தன்னியல்பு ஆத்மாவுக்குத் தோன்ற முன்னிற்பாராகில், அதிகரித்த பிரபாவமுள்ள ஒளியிற் கண் தொழிற்படாமை போல, ஆத்மாவின் தொழிற்பாடு நிகழாதொழியவும், அதன் ஆணவமுனைப்புத் தேயாமல் இருந்து விடவும் நேரும். இது ஆத்ம நலனுக்கேற்றதல்ல, அது பற்றியே இக்கட்டமான சகல நிலையில் சிவம் முன்னெச்சரிக்கையாக ஆத்மாவின் பின்னணியில் மறைந்து நிற்கிறது. இதுவே அவ்விளக்கமாம்.

சகல நிலையில் சிவன் இப்படி நின்றியற்றும் உபகாரம் மறைநிலை உபகாரம் எனப்படும். இவ்வுபகாரத்தின் சார்பில் மற்றோரிரகசியமும் அறிய உள்ளதாகும். தன் ஆற்றலற்றதாகிய ஆத்மாவைச் சிவன் பின்னின்று இயக்குவது பற்றிய விளக்கம் அதிலடங்கும். மேற்கண்ட விதமான ஆத்மாவின் ஆணவ முனைப்புத் தொழிற்பாடு இருந்தவாற்றைத் தடவைக்குத் தடவை கண்டுகண்டு அவ்வப் போதைய அதன் நிலைக்குத் தக்கவாறு அதன் வினைப்பயன்களைச் சிவன் ஊட்டுதல் அவ்விரகசியமாகும். காவடி ஆடுபவனுடைய ஆட்டச் சுதியின் உத்வேகம் இருக்குந் தரத்தை அவனது கால் மிதியசைவுகளாற் கண்டுகண்டு அவ்வப்போதைய நிலைக்குத் தக்கவாறு செடிற்கயிற்றை இளக்கிக் கொடுக்க அவன் பின் மறைந்து நிற்கும் செடிற்காரன் நிலை போல்வது இது எனலாம்.

இந்நிலைமை இருபா இருபஃது என்ற சித்தாந்த நூலில் அருணந்தி சிவாச்சாரியாராற் கொடுக்கப்பட்டிருக்கும் ஒரு வர்ணனையை அறிதல் மூலம் நன்கு விளங்கிக் கொள்ளப்படும்.

"என்னுட் கரந்து என்பின் வந்தருளி
என்னையுந் தன்னையும் அறிவின்றியற்றும்
என்னது யானெனும் அகந்தையும் கண்டு
யாவையின் யாவையும் யாங்கணுஞ் சென்று
புக்குழிப் புக்குப் பெயர்ந்துழிப் பெயர்ந்து
மிக்க போகம் விதியால் விளைந்திட்டு
ஏற்பணியாளாய் எனை நீங்காதே
ஓடி மீள்கென ஆடல் பார்த்திட்டு
என்வழி நின்றனன் எந்தை"

எனக்குள்ளே தான் மறைந்து, என்னை முன் விட்டுத் தான் எனக்குப் பின் வந்து, தன்னையும் என்னையும் நான் அறியாதபடி நடத்தி எனது அகங்கார மமகாரங்களின நிலையையுங் கண்டு கண்டு அவ்வந்நிலைக்குத் தக்கவாறு எனக்கு அநுபவங்களையும் ஊட்டி ஊட்டி எனது வேலையாளாய் என்னை விட்டுப் பிரியாமல் நின்று "ஓடு மட்டும் ஒடித்திரும்பு" என்ற பாணியில் என்வழி நின்றான், எனது அப்பனாகிய சிவன் – என்பது அப்பாடலும் பொழிப்புமாம்.

இவ்வகையிற் காணும் போது இச்சகல நிலையில் ஆத்மாவுக்கு அமையும் சிவனுடனான சம்பந்தம் முன்னைய நிலையில் அமைந்ததிலும் பார்க்க அதிக வீறும் விறலும் மிக்கிருத்தல் காணலாம்.

இவ்வாறான சிவனது பின்னிலை உபகாரம், இதன் பேறாக ஆத்மாவின் ஆணவ முனைப்புத் தேய்ந்தழியும் இறுதிக் கட்டம் வரை உளதாகும். இதன் மேல் ஆத்மாவின் நிலை மூன்றாவது நிலையாகிய சுத்தநிலை எனப்படும். ஆன்மாவுக்குச் சிவனுடனான சம்பந்தம் இந்நிலையில், முன்னைய சகலநிலையில் இருந்ததற்கு நேரெதிராம். சகல நிலையில் ஆத்மாவை முன் நிற்கவிட்டுச் சிவன் பின் நின்றார். இந்நிலையிற் சிவன் முன் நிற்க ஆன்மா பின் நிற்கிறது.

"நும்பின் எம்மை நுழையப் பணியே என்பாரும்.
அன்பன் ஆரூர் ஆதிரை நாளா லதுவண்ணம்."

என்ற அப்பர் தேவாரம் சிவனது முன் நிலை உபகாரத்தை நன்கு காட்டுகிறது. திருவாதிரைத் திருவிழாவைச் சேவிக்கும் அடியார்கள், அப்பனே நாங்கள் உன்பின்னாக நிற்கும் நிலையை எமக்கு அருள்வாயாக, என்று வேண்டுகிறார்கள். ஆலய விழாக்களிற் சுவாமி எழுந்தருளும் போது வழிபடுவோர் சுவாமிக்குப் பின்னாற் சேவித்துச் செல்ல வேண்டும் என்ற விதியினாலும் நடைமுறை வாழ்வில் இளையார், முதியோர் பின்னும், அறிவிற் சிறியார் அதிற் பெரியோர் பின்னும் செல்ல வேண்டும் என்ற விதியினாலும் சைவப் பண்பாடு இம்மெய்ஞ்ஞான உண்மையை அறிகுறி மாத்திரையாற் பேணிவருதல் உணரத்தகும்.

அக்கேவல நிலையிற் சிவன் புரிந்த உபகாரம் மறை நிலை உபகாரம் என்றால் இச் சுத்தநிலை உபகாரம் வெளிப்படை நிலை உகபகாரம் எனப்படலாம். முன்னைய நிலை சிவன் ஆன்மாவை முன் நின்று செயற்பட விட்டுத்தான் பின் நின்று உபகரிப்பதாயிருக்க, இச் சுத்த நிலை சிவன் ஆன்மாவைப் பின் நிற்க விட்டுத் தானே முன்நின்று உபகரிப்பதாகின்றது. இன்னுந் தெளிவாகச் சொல்வதானால் ஆத்மாவின் செயற் பொறுப்பு முழுவதையும் தன் பொறுப்பாக ஏற்றுக் கொண்டு சிவம் முன் நிற்கின்றமை எனலாம். எனவே முன்னைய நிலை ஆணவ முனைப்பின் விளைவான ஆன்மாவின் விருப்புக்குத்தக்கதாகச் சிவன் அருளும் நிலையாக, இந்த நிலை அருள் நோக்காகிய சிவன் விருப்புக்குத்தக ஆன்மா அடங்கி நிற்கும் நிலையாய் விடுகிறது. இந்த நிலையை.

"என் செயலாவது யாதொன்றுமில்லை இனித் தெய்வமே
உன்செய லேயென் றுணரப் பெற்றேன் "

என்று பட்டினத்தடிகள் குறிப்பிட்டுள்ளார்.

சுத்தநிலை பெற்றுச் சிவன் செயலே தன் செயலாக உணர்வு பூர்வமாக அமைந்து நிற்கும் ஆத்மாக்களுடைய பொறுப்பு முழுவதையும் சிவன் தன் செலயலாக ஏற்று நிற்கும் கருணை விசேடம் தேவாரப் புகழ் பெற்ற ஒன்றாகும். மார்க்கண்டேயர்க்கு ஆயுள் பதினாறு என்ற முறையிற் பதினாறாம், ஆண்டு முடிவில் அவருயிரைக் கொள்ள வருகின்றான் யமன். அவ்வெல்லைக்கிடையில் அவர் தன் முயல்வால் சிவன் பின் தான் நிற்கும் சுத்தநிலை அடைந்து விட்டமையை யமன் அறியான். அதனால் அந்நிலையில் அவர் பொறுப்பைத் தன் பொறுப்பாக ஏற்றுக் கொண்ட சிவனது காலுதைக்கு ஆளாகி இறக்கின்றான் யமன். இவ்வுபகாரத்தைப் போற்றிப் பரவும் திருஞான சம்பந்த மூர்த்தி சுவாமிகள் தேவாரம் அந்த உதையின்தொனி,

"என்னடியான் உயிரை வெளவேல்" என்றிருந்ததாகத் தெரிவிக்கின்றது.

"நின்னடியே வழிபடுவான் நிமலா நினைக்கருத
என்னடியான் உயிரை வெளவேல் என்றடற் கூற்றுதைத்த
பொன்னடியே பரவி நாளும் பூவொடு நீர் சுமக்கும்
நின்னடியார் இடர் களையாய் நெடுங்களம் மேயவனே"

*என்பது தேவாரம்.*

சைவ சமயாசாரியர் வரலாற்றில் அவர்களின் கருமத்தைச் சிவன் தன் கருமமாகவே கொண்டியற்றிய சம்பவங்கள் மிகப்பல. ஏனைய நாயன்மார் வரலாறுகளிலும் அங்ஙனமே. பிள்ளைகளின் பட்டினி வருத்தங் காணச் சகிக்காமையாற், கடைசி மூச்சு வரை கழுத்தைவிட்டு விலக்கலாகாத தன் தாலியையே சுழற்றி அதை விற்று அரிசி வாங்கி வருமாறு மனைவியார் கொடுத்துவிட அது செய்யுமளவுக்கு வேண்டுந் தன்முனைப்பற்று நின்ற குங்கிலியக் கலய நாயனார் தம் போக்கில் குங்குலியம் வாங்கிக் கொண்டு நேரே கோயிலுக்குப் போய் மனைவி – மக்கள் நினைவோடு தம் நினைவுங் கெட்ட நிலையில் கோயிலில் குங்குலியமிடும் நினைவே நினைவாக அங்கேயே தங்கியும் விடுகிறார். இது அவர் சிவனைப் பின் நிற்கும் நிலையாய் விடுகிறது. நிலைமை இதுவாக அவர் பொறுப்பைத் தன் பொறுப்பாக மேற் கொண்ட சிவன் திடுதிப்பென அவர் வீட்டில் வேண்டுந் திரவியமெலாம் நிரப்பி மனைவியார் சமையல் பண்ணத் தொடக்கிவிட்டு, 'ஏன் இனி வீடு போய்ப் பசியாறி வரலாமே' என நாயனார்க்கும் உணர்த்தியதாக உள்ள வரலாறு இங்குக் கருதத் தகும்.

இனி இச் சுத்த நிலையின் முடிபாக ஆத்மா இனியும் பிறப்புக்கு வாராத நிலை அடைந்து சிவனைச் சார்ந்து தான் பேரின்பம் நுகர்வானாகவும், சிவன் அதனை வழங்குபவனாகவும் கண்டு பேரானந்தம் பெற்றிருக்கும் நிலையை விளக்க மற்றெல்லா நூல்களுக்கும் முன்னணியில் நிற்கும் திருவாசகம் இருக்கவே இருக்கிறது.

இது வரை நாம் கண்ட இவ்விபரமெல்லாஞ் சொல்வதென்ன? ஆன்மாவுக்கு முன்னுஞ் சிவசம்பந்தம்; இடையிலுஞ் சிவசம்பந்தம்; பின்னுஞ் சிவசம்பந்தம்; என்றுஞ் சிவசம்பந்தம்; எங்கும் சிவசம்பந்தம்; தொடக்கங் காணாத் தொடக்கத்திலிருந்து முடிவு காணா முடிவுறுதி சிவசம்பந்தம் என்பதே தான் நாம் காண்பது.

இச் சிவ சம்பந்தத்தையே தன் உருவுந் திருவுமாகக் கொண்டமைந்த பெயர் சைவம்.

மருந்துக் குளிகையில் என்னென்ன பதார்த்தங்கள் சேர்ந்திருக்கின்றன. ஒவ்வோர் பதார்த்தமும் உள்ளுடலில் என்னென்ன பழுதுகளுக்கு, என்னென்ன வகையிற் பரிகாரமாகின்றது, என அறியாமலே மருந்துக் குளிகையை விழுங்கி விடுவதும் அதனாற் சுகங்காண்பதும் நமக்குப் பழக்கமாய் விட்ட வழக்கம். அதே போல் நமச்சிவாய மந்திரத்தில் எந்த எந்த அக்ஷரம் என்னென்ன பொருளில் நிற்கிறது. ஆத்ம நலப் பேற்றுக்கு அது என்னென்ன விதத்தில் உதவுகிறது என அறியா நிலையிற் கூட அதை உச்சரித்தால் நிச்சயம் ஆன்மலாபப் பேறு

கிட்டுதற்கான சிவப் பிரீதியை அதுவே உண்டாக்கும் என்பது திருமுறை உபதேசம்.

“ஏதும் ஒன்றும் அறிகிலர் ஆயினும்
ஓதி அஞ்செழுத்தும் உணர்வார் கட்குப்
பேதம் இன்றி அவரவர் உள்ளத்தே
மாதும் தாமும் மகிழ்வர் மாற் பேறரே”

என்பது அப்பர் சுவாமிகள் தேவாரம்.

மாற்பேறர் – திருமாற் பேறு என்ற சிவ தலத்தில் எழுந்தருளியிருக்குஞ் சிவபெருமான்

இந்நோக்கில், மேற்கண்ட விபரப் பிரகாரம் சைவ மெய்ஞ்ஞானக் கருவூலமாயிருக்கும் சைவம் என்ற பெயர் வழக்கும், வழங்குவோரிடத்தில் தன் பொருளான ஞான உணர்வைத் தானாகவே உணர்த்தி அவரவர் உள்ளத்தே மாதுந்தானுமாகச் சிவன் மகிழவைக்குஞ் சாதனமாதலில் ஆட்சேபம் நிகழ்தற் கிடமில்லையாகும். நமது சிவாகமங்கள், சைவ சித்தாந்த சாத்திரங்கள், சைவ புராணங்கள், சைவத்திருமுறைகள் அனைத்தும் நமது முன்னாட் சைவ முதுகுரவர்கள், பின்னாட் சைவப் புனருத்தாரண சீலர்கள் அனைவரும் ‘சைவம்’ என்ற பெயர்வழக்கையே மேற் கொண்டு வந்திருப்பதும் அப்பெயரின் அத்தகைய அருமை பெருமைகளைப் பேணும் நோக்கிலேயே என்பதில் அபிப்பிராய பேதம் இருக்க முடியாதென்பதும் அங்ஙனமே.

நேற்றுவரை, அதாவது மிகச் சமீப காலம் வரை, சைவ சமூக வழக்கில் பயின்று நிலைபெற்று வந்துள்ள சைவ சமயம், சைவாலயம், சைவாகமம், சைவக் குருமார், சைவ இளைஞர், சைவ மன்றம் என்ற அர்த்த பூர்வமான வழக்குகளே நமக்கழகானவை. அதற்கெதிர், சைவம் என்றதன் இடத்தை ஆக்கிரமிக்கும் அர்த்தமற்ற இந்துப் பெயரோடு கூடிய இந்து சமயம், இந்துக் கோவில், இந்து ஆகமம், இந்து தருமம் முதலிய வழக்குகள் சைவத்திற்கும், நமக்கும் அபகீர்த்தி விளைவிப்பவை. அகௌரவமானவை. இந்து என்ற பதத்தின் அசுபத் தன்மை, அர்த்தமின்மை, அந்நியத் தன்மைகளுக்கும் மேலாக, அதன் கர்த்தாக்களின் கொள்கை விகற்பச் சார்பில் அது கொண்டு காவும் சைவ விரோதத் தன்மையும் இயல்பான சைவத்தின் மேற் கால் போடும் அதன் ஆக்கிரமிப்புத் தன்மையும், அதன் ஊடறுப்புத் தன்மையும் பிரசுரம் 1 இல் எடுத்துக் காட்டப் பட்டிருத்தல் கொண்டு இது நிச்சயிக்கப்படும்.

எனவே சைவ சமூகத்தில் ஒதுக்கிடம் பெற முயலும் ‘இந்து’ எனும் இவ்வழக்கம் முற்றாக நிராகரிக்கப்பட்டுச் சைவ வழக்கே தனி வழக்காக நிலவ வைக்கப்பட வேண்டுமென்பதில் தவறேதும் இல்லையல்லவா!.
சிந்தியுங்கள்.

சைவத் தமிழ் அறிவியற் பண்பாட்டியக்கம்.

தங்கள் பெறுமதிமிக்க அபிப்பிராயங்கள் பின்வரும் விலாசத்துக்கு,

மு. கந்தையா,
சத்தி முற்றம்,
ஏழாலை மேற்கு,
சுன்னாகம்.

# சாணும் வளர்க்க ..........

– முருகவே பரமநாதன் –

" தேடிச் சோறு நிதந்தின்று - பல
சின்னஞ் சிறு கதைகள் பேசி - மனம்
வாடித் துன்பமிக உழன்று - பிறர்
வாடப் பல செயல்கள் செய்து "

-பாரதி

வயிற்றுக்குச் சோறிட வேண்டுமென்ற பாரதி வாழ்விலே இதமான எண்ணங்கள் வேண்டும் என்றார். இந்தச் சோற்றுப் பருக்கைக்காக ஒவ்வொருவரும் படும்பாடு! வேடிக்கையான மக்கள் கூட்டம் போல் நான் வீழ்ந்து விடமாட்டேன் என்னும் புதிய எண்ணத்தை மனதிலே நடமாட விட்டவர் பாரதி. இந்த உணவு தான் உயிரின் சீவ சத்து. பசிவந்திடப் பத்தும் பறந்து போம் என்பது அவ்வை திருட்டாந்தம்.

" மானங் குலம்கல்வி வண்மை அறிவுடைமை
தானந் தவமுயற்சி தாளாண்மை - தேனின்
கசிவந்த சொல்லியர்மேல் காமுறுதல் பத்தும்
பசிவந்திடப் பறந்து போம்"

ஔவையார்.

> பிறர் நம்மிடம் எவ்வளவு துன்பந்தரக் கூடிய வன்சொல்லைக் கூறினும் நாம் அவரிடம் இன்சொல்லே கூற வேண்டும். அவர்களைத் திருத்தவும் நம் வயப்படுத்தவும் இன்சொல்லே சிறந்த கருவியாம்.
>
> -திருமுருக கிருபானந்த வாரியார்.

வாழ்வின் மூலக்கரு உணவு. எண்சாண் உடம்பு; எறும்பு கூடத்தன் கையால் எண்சாண் என்பர். மனிதனின் வயிறு ஒரு சாண். இதற்காகவே இவ்வளவு ஓட்டமும், பாட்டமும். வேடுவன், ஞானி, வேந்தன், ஆண், பெண் என்ற பேதமில்லை. பசிவந்தாற் கொதிதான். இடும்பை கூரென்வயிறே உன்னோடு வாழ்தல் அரிது என்று கேட்டவள் ஔவை. காரணம் உடனுக்குடன் வேளை தவறாது உணவளிக்காது விடின் ஜடராக்கினி கொழுந்து விட்டெரியும். இந்த நிலையிற் பட்டினத்தார் கூட அவதிப்பட்டார். அடிகளார் கொங்கு நாட்டில் தங்கியிருந்த வேளை ஒருதினம், ஒருவர் வீட்டிற்குப் பிச்சை ஏற்கப் போயிருந்தார். வீட்டுக்காரன் சுவாமிகளைக் கள்வனென்று நினைத்து அடித்தான். அதைக் கண்ட எதிர் வீட்டுக்காரன், சுவாமிகளை அழைத்துச் சென்று உபசரித்து உணவு வழங்கினான். பசியாறிய சுவாமிகளோ துறவுக்கு ஓர் எடுத்துக் காட்டு. அவரின் திருவாயில் இருந்து பாய்ந்த பாடல் இது.

"பூணும் பணிக்கல்ல, பொன்னுக்குத் தானல்ல, பூமிதனைக்
காணும் படிக்கல்ல, மங்கையர்க் கல்லநற் காட்சிக்கல்ல
சேணுங் கடந்த சிவனடிக்கல்லவென் சிந்தைகெட்டுச்
சாணும் வளர்க்க அடியேன் படுந்துயர் சற்றல்லலே.

பட்டினத்தார் பாடல் 90

என்னென்னத்துக் கெல்லாம் மனிதன் கஷ்டப்படுகிறான். ஆனாலிந்த வயிற்றை நிரப்பப் படும்பாடு. ஒரு கணம் பிந்தினாற் படும் கஷ்டம்; ஆமாம் அணிந்து கொள்ளும் தங்க நகைகளுக்காக வல்ல, செல்வம் திரட்டுவதற்காகவல்ல, நிலபுலன்களைப் பெருக்கிக் கொள்ள வல்ல, பெண்களோடு இணைவிழைச்சுக்காக வல்ல, அழகான பொருள்களைக் கண்டு மகிழ்வதற்காக வல்ல, வானத்தையும் கடந்து விளங்குகின்றசிவபெருமானின் திருவடிகளுக்காகவும் அல்ல. என் மனம் அழிந்து ஒரு சாண் வயிற்றை வளர்க்க அடியேன் படுந்துயர் இக்கட்டு, கொஞ்ச மன்று என மனம் நைந்து பாடுகிறார் பட்டினத்துச் சுவாமிகள்.

எல்லவற்றையும் உதறிய பின் மிஞ்சியது உயிரோடிணைந்த உடம்பு; இதற்கு எவ்வளவு பாடு. ஒரு வேளை உணவுக்கா இந்த நெருக்கடிகள் என எண்ணும் போது மனமே வெதும்பிப் போகிறது. அதனைச் சிந்தை கெட்டு எனப் பேசுகிறார். இதனாலேதான் இருக்குமிடந்தேடி என் பசிக்கேயன்னம் உருக்கமுடன் கொண்டு வந்தால் உண்பேன் பெருக்க, அழைத்தாலும் போகேன் அரனே என்தேகம் இளைத்தாலும் போகேன் இனி என்று பாடினார். பசியின் பொருட்டுத் தாமே பிறர் இல்லஞ் சென்று இரப் போர் திருவருள் வழி ஒழுகாதார். திருவருள் வழிநிற்போர் எங்கிருப்பினும் அவர் கட்குத் திருவருட் தூண்டுகோலாற் பலர் தாமே வலிந்து வந்து அன்னமிடுவர்.

யாவர்க்குமாம் உண்ணும் போதோர் கைப்பிடி என்பர் திருமூலர். எமக்கென்னென்று இட்டுண்டு இரும் என்கிறார் தமிழ் மூதாட்டி. ஆதி சங்கரர் பிச்சை ஏற்கச் சென்ற போது ஒரு அன்னை இட்ட நெல்லிக்காய் கண்டு கனகதாரா பாடினார் பசூத சந்நியாசிகள் பிச்சை ஏற்று வாழ்வர். இந்தப் பொல்லாத பசியினால் மரணித்தோரும் தற்கொலை செய்தோரும் பலர். சைவநீதி சொல்லும் மகேஸ்வர பூஜையும் உண்டி கொடுப்பதும் சமயம் காட்டும் நெறியாகும். எனவே மக்கள் தொண்டே மகேஸ்வரன் தொண்டு. நடமாடுங் கோயில் நம்பர்க் கொன்றீயிற் படமாடுங் கோயிற் பரமார்க்கங்காகும்.

'தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றாங்கு
ஐம்புலத்தா றோம்பல் தலை.

*– குறள் 43*

இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க

## அபிராமியம்மை பதிகம்

கலையாத கல்வியும் குறையாத வயதுமோர்
கபடு வாராத நட்பும்
கன்றாத வளமையும் குன்றாத இளமையும்
கழுபிணி இலாத உடலும்
சலியாத மனமுமன் பகலாத மனைவியும்
தவறாத சந்தானமும்
தாழாத கீர்த்தியும் மாறாத வார்த்தையும்
தடைகள் வாராத கொடையும்
தொலையாத நிதியமும் கோணாத கோலுமொரு
துன்ப மில்லாத வாழ்வும்
துய்ய! நின்பாதத்தில் அன்புமுத விப்பெரிய
தொண்டரொடு கூட்டுகண்டாய்,
அலையாழி அறிதுயிலும் மாயனது தங்கையே
ஆதிகட வூரின்வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி
அருள்வாமி அபிராமியே!

# குமரகுருபரர்

– பாண்டிதர் ச. சுப்பிரமணியம் –

வானம் அளந்து வளர்தமிழ் பாடி வான் புகழ் கூடியவர் வரகவி குமரகுருபரர். திருச் செந்தூர் முருகனருள் பெற்று ஊமை தீர்ந்து பேசியவர். அவர் திருவாய் மலர்ந்து முதற் பாடியபாடல் கந்தர்கலிவெண்பா. அறிஞர் இதனைக் குட்டிக்கந்த புராணமென்பர். திருமுருகாற்றுப்படை போலவே இக் கந்தர்கலிவெண்பாவையும் தினமும் பாராயணம் செய்து கல்வி, செல்வம், புகழ் சேரச் செம்மை வாழ்வு பெற்றோர் பலர். இக் கலிவெண்பா ஆகிய பாடலைப்படிப்பது கந்தபுராணம் முழுவதையும் படிப்பதற்கு நிகராகும்.

இப்பாடலிற் கந்தபுராணக் கதையின் சாரம் முழுவதும் பின்பகுதியிலே சொல்லப்படுகிறது. முன்பாகத்திற் சைவசித்தாந்த சாரம் முழுதும் பிழிவாகத் தரப்படுகிறது. மேலும் அற்புதமான கவிநலம் கனிந்து விளங்குகிறது. கல்வி நலம்பெற நாடுநர் யாவரும் இதனைப் பாராயணம் செய்துவரின் முருகனருள் தரும்.

குருபரர் அருளிய பிரபந்தங்கள் பல. அனைத்திலும் தெய்வீகமணமும் சுவையும் குழைத்துத் தரப்படுதல் கண்டுகளிக்கலாம். தமிழ் கற்போர் எவரும் அவசியம் கற்றுச்சுவைக்க வேண்டிய கவிதைகளாகவே யாவும் அமைந்துள. மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் அருள்நலம் மிளிரும் அமிர்தகனி. முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ் என்பதும் மாதுரியக்கனி. மதுரைமன்னருக்குத் தெரியத் திருக்குறளின் பொருளடக்கத்தைச் சாரமாகச் சாற்றும் நூல் ஒன்று திருக்குறளைப் படித்துப்பெறும் பயனை முற்றும்தரவல்லது. மீனாட்சியம்மைகுறம் நாடக பாணியில் இயலும் பிரபந்தம்; சொற் பொருள்யாப்பணி அழகுகள் எல்லாம் அடங்கிய அருங்கலப்பேழையாகும். குமரகுருபரர் அருளிய பாடல்களைப் படியாதவர் தமிழன்னை படைத்த விருந்தில் "பழச்சலாது" எனப் பரிமாறப்படும் அருமந்தசுவை உணவைச் சுவைக்கத் தவறியவரேயாவர்.

இலக்கணக்கவிஞர் ஒருவர் குருபரரின் கவித்துவச் சிறப்பையறியாது "இவன் இலக்கணம் கற்றறியாதவன், இவன் பாடலில் சிறப்பு எப்படியிருக்கும்" என இகழ்ச்சியாகப் பேசியதாகவும், அதைக்கேள்வியுற்ற குருபரர் செய்யுள் இலக்கணங்கள் எல்லாம் அமைந்த எடுத்துக் காட்டாக விளங்கச் 'சிதம்பரம் செய்யுட் கோவை' என்றொரு பிரபந்தம் பாடியதாகவும் கூறப்படுகிறது. அதில் ஒரு பாடல், ஒரு பானை சோற்றுக்கு ஓரவிழ் என்ற வகையிற் காண்போம். பாடல் வருமாறு:–

"உண்டாங்கெனினும் இலதென்றறிஞர்கள் பொய்யெனப்புகலவும்
மெய்யெனப் பெயர்பெற்று உன்னாமுனம் மின்னாமென
ஊதாய் மாய்வது நிலையில்யாக்கை
கண்டாங்கிகழும் கிழமுதிரமையத்து ஐவளிபித்தென
மெய்தரும்வித்தில் கடலில் திரையென உடலில்திரையொடும்

கலியா நின்றன நலிவுசெய் நோய்கள்
புண்டாங்கயில்முக் குடுமிப்படையொடும் எயிறலைத்தழல்விழித்து
உயிருணக் கனல்சேர் புகையாமென நிழலாமெனத்
தொடராநின்றது கொலைசெய்கூற்றம்
விண்டாங்கலுபு மெய்ப்பொருள் துணிவோர் மின்னார்பொன்புனை
மன்றிலெம்முயிராம் விமலன் குஞ்சித கமலம்கும்பிட
வேண்டுவர் வேண்டார் விண்மிசை உலகே.

இப் பாடலில் நிலையாமையின் இயல்பும், நிலையானபேறு கருதும் மெய்யுணர்வுடையோர் நிலையும் சித்திரிக்கப்படுகிறது. உலகில் வாழ்வது மெய்யெனக் கருதும் நிலையும் வீடுபேறே நிலையானதெனக் கருதும் நிலையும் ஒன்றுக்கொன்று முரணானவை. அவ்வுண்மையைப் பாடலில் அமைந்த சொற்றொடர்களிலேயே முரண்பாடாக அமைத்துப் பொருளுணரும் போது முரண்பாடு நீங்கவும் காட்டும் சித்திரவர்ணக்கலப்பு மகாவிசித்திரமாய் அமைகிறது.

மேலோட்டமாகப் பாடும் பொழுது அநுபவமாகும் சொற்சுவை மேலும் உள்ளீடாக அமைந்த பொருட்சுவையையும் காணும்போது இன்பம்இருமடி. ஆதலின் பொருளையும் சிறிதுசிந்திப்போம்.

சிற்றறிவினராகிய எமக்கு எமதுடம்பும் வாழ்வும் நிலையுள்ளது (உண்டு) என்பது போலத் தோன்றும்; தோன்றினும் மெய்யறிவுடையோர் நிலையில்லது; அழிந்துபடும் பொய்த்தோற்றமானது என்பர்; எனினும் தன்பெயர் மெய் என்றதாகவே எம்முடம்பு பெற்றுள்ளது; ஆயினும் உன்னிய எண்ணம் எண்ணுமுன்னம் கணத்தில் மின்னலைப் போலத்தோன்றி அழிவது நிலையில்லாத இவ்வுடம்பு;

காணும்எவரும் கண்டபோதே இகழத்தக்க முதுமைநிலை முதிரும்போது உடம்புவாழ உறுதுணை செய்திருந்த சேடம் வாதம் பித்தம் என்ற மூன்றுமே மாறாக எழுந்துவரும் காரணமாகத் தோற்றுவித்தலால் வரும் கடலிலெழும் திரைகள்போல உடம்பிற் காணப்படும் (நரை) திரையோடு எம்மை நலிவுறுத்தும் நோய்கள் பலவும் வீறுகொண்டெழுவனவாயின; அவ்வளவிலே

புண் (தசை) பொருந்திய கூரிய முத்தலைச்சூலம் (பாசம்) ஆகிய படைகளோடும் பற்களைக்கடித்து அதட்டிக் கோபக்கனல் சிதறப்பார்த்து எம்முயிர் கவரும்பொருட்டு நெருப்புடன் சேர்ந்தெழும் புகைபோலவும் எம்மைப் பிரியாது தொடரும் நிழல்போலவும் காலம்பார்த்துக் கொண்டே உடன் தொடருகின்றது கொல்லவரும் கூற்றம் – இயமன்;

(எல்லாவிதங்களாலும் நோக்கும்போது உயிருக்குமுற்றிலும் முரணானஅந்நியமான உடம்போடு கூடிவாழ்வது உயிருக்குஉகந்ததன்று என) உலகவாழ்வை உவர்த்துவிட்டு அங்குள்ள பற்றுகளினின்றும் அகன்று, என்றும் உயிருக்கு உறவாகியுள்ளதும் உறுதிபயப்பதுமாகிய மெய்ப்பொருளையே (சிவமும் அதுதரும் வீடும்) சாசுவதம் எனத் தெளிவாக உணர்ந்தோர்செயல் எவ்வாறிருக்குமெனில் கூறுதும்.

மின்போல மிளிரும் பொன் மயமான மன்றினிடமாக நின்றுநிருத்தமிடும் எம்முயிர்க்கெல்லாம் (பசுபதி) உயிரான மலரகிதனாம் நடராசப்பெருமானினது தூக்கிய திருவடித் தாமரைகளையே புகலாக வேண்டுவார்கள். அஃதன்றி விண்மிசையோரான அரிபிரமேந்திராதி தேவர் வாழும் போகப்பதங்கள் எவற்றையும் வேண்டார்.

இக்கவிச் சித்திரத்திற் காணப்படும் வர்ண முரண்பாடுகளாவன: உண்டு, இலது; பொய், மெய்; உளதாய், மாய்வது; வேண்டுவர் வேண்டார்; இனிமைதரும்பிராசத்தொடர்கள்: உன்னாமுனம், மின்னாமென; இகழும்கிழம் ; கடலில் திரை, உடலில் திரை; கலி நலி; மின்னார், பொன்புனை; விமலன், கமலம்; என்பன.

உடன்பிறந்தே கொல்லும் வியாதிகளாகிய உட்பகையும் இறுதி நாள் கருதி உயிர் கவர வரும் கூற்றுவனாகிய புறப்பகையும் அழகோவியமாயுள. விமலன் குஞ்சிதகமலம், வேண்டுவர் வேண்டார் என்ற தொடரழகே அழகு.

ஆக இங்ஙனமே குமரகுருபரர் அருள் வாக்குகள் முரண்விளைந்தழிவதாய் அழகு தருவதோடு ஆருயிர்க் கரண்தரும் அறிவுரைகளும் ஆங்காங்கமையும் வண்ணமும் காணவும் கருதவும் வேண்டியன.

## நினைவிற் கொள்வதற்கு

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஐப்பசி | 1. | 18.10.98 | ஞாயிறு | – | மாதப்பிறப்பு |
| | 2. | 19.10.98 | திங்கள் | – | தீபாவளி |
| | 3. | 20.10.98 | செவ்வாய் | – | அமாவாசை விரதம் கேதார கௌரி விரதம் |
| | 4. | 21.10.98 | புதன் | – | ஸ்கந்த ஷஷ்டி விரதாரம்பம் மெய்கண்ட தேவர் குருபூசை |
| | 6. | 23.10.98 | வெள்ளி | – | ஐப்பசி வெள்ளி பூசாலர் குருபூசை |
| | 7. | 24.10.98 | சனி | – | சதுாத்தி விரதம் |
| | 8. | 25.10.98 | ஞாயிறு | – | ஸ்கந்த பஞ்சமி ஐயடிகள் காடவர் கோன் குரு பூசை |
| | 9. | 26.10.98 | திங்கள் | – | ஸ்கந்த ஷஷ்டி விரதம் |
| | 13. | 30.10.98 | வெள்ளி | – | ஐப்பசி வெள்ளி |
| | 14. | 31.10.98 | சனி | – | ஏகாதசி விரதம் |
| | 15. | 01.11.98 | ஞாயிறு | | பிரதோஷ விரதம் |
| | 17. | 03.11.98 | செவ்வாய் | – | பூரணை விரதம் |
| | 18. | 04.11.98 | புதன் | – | ஐப்பசிப் பரணி |
| | 19. | 5.11.98 | வியாழன் | – | நெடுமாறர் குருபூசை, கார்த்திகை விரதம், இடங்கழியார் குருபூசை |
| | 20. | 06.11.98 | வெள்ளி | – | ஐப்பசி வெள்ளி |
| | 21. | 07.11.98 | சனி | – | சங்கடஹர சதுர்த்தி |
| | 24. | 10.11.98 | செவ்வாய் | – | சத்தியார் குருபூசை |
| | 27. | 13.11.98 | வெள்ளி | – | ஐப்பசி வெள்ளி |
| | 28. | 14.11.98 | சனி | – | ஏகாதசி விரதம் |
| | 30. | 16.11.98 | திங்கள் | – | பிரதோஷ விரதம் விஷ்ணுபதி புண்ணிய காலம் |

# மேன்மை கொள் சைவ நெறி

– வைத்திய கலாநிதி க. வேலயுதபிள்ளை–

சிவனை முழுமுதற் கடவுளாய் ஏற்றுக் கொள்ளும் சமயமே சைவசமயம். உலகிற்கு ஆதிகாரணன் சிவனென்பதே இச்சயத்தின் முடிந்த முடிபாகும். இது சுவேதாசுவதர உபநிடதம் கூறும் உணமயாகும். உபநிடதங்களுள் ரிஷிகளாற் கூறப்பட்ட உண்மையே திருமுறைகளும் சைவசமய சாத்திரங்களுந் தெரியத் தருகின்றன. ‘‘எல்லா உலகமும் ஆனாய் நீயே’’ என்றுந் ‘‘துய்ப்பனவு முய்ப்பனவுந் தோற்றுவாய் நீ துணையாய் என் நெஞ்சந் துறப்பிப்பாய் நீ’’ என்று திருநாவுக்கரச நாயனார் நவின்றதும் சிவனே எல்லாம் என்ற ஐயமற்ற முடிபை ஒட்டியவையே.

நாம் ஒவ்வொருவரும் இயங்குவது நமக்கு உயிர் என்ற ஒன்று இருப்பதாலேயே. உயிரற்ற சடலம் உணர்வையும் இயக்கத்தையும் இழக்கின்றது. இதனால் உயிர் அறிவுடைய பொருள் என்றும் உடம்பு அறிவில்லாத பொருள் என்றும் அறிய முடிகின்றது. ‘‘ஐந்து கல்லால் ஒரு கோட்டை அந்த ஆனந்தக் கோட்டைக்கு ஒன்பது வாசல்’’ என ஒரு பாட்டுண்டு. இது ஒன்பது வாயில்களை உடைய, ஐம் பூதங்களாய நிலம் நீர் நெருப்பு காற்று ஆகாயம் ஆகியவற்றால் ஆக்கப்பட்ட நமது உடம்பைக் குறிப்பதாகும். இங்கே கூறப்பட்ட நமது ஐம்பூதங்களும் உலகத்திலுள்ள ஐம்பூதங்களை ஆதாரமாக உடையன. உலகத்தை நடத்தும் பரம்பொருள் அறிவுடைய பரம்பபொருள் என்பது சைவ நூல்களின் துணிபு. சடமான உடல் உயிரின்றி இயங்காமை போன்று சடமாகிய உலகமும் இயங்க அதற்கோர் அறிவுடை உயிர்ப்பொருள் வேண்டுமென்பது தருக்கரீதியிற் பெறத்தக்கதாகும்.

மேலும் சிந்தித்தால் உடம்பிலுள்ள ஐம்பூதங்கட்கும் உலகத்து ஐம்பூதங்கள் ஆதரவாக அமைவது போல் உடம்பினை இயக்கும் உயிராகிய அறிவுப் பொருள் உலகிற்குத் தலைவனாகிய பேரறிவுப் பெரும் பொருளை ஆதரவாகவுடையது. இக் கருத்தைத் திருமூல நாயனார் அறிவற்ற தத்துவங்களாகிய சத்த, பரிச, ரூப, ரச, கந்தமாகிய தன் மாத்திரைகள் ஐந்தும் தோன்றிய முறையே அறிவற்ற அகங்காரத்தில் ஒடுங்குவது போல் அறிவுமயமான ஆன்மா அறிவுமயமான சிவனைத் தவிர ஒடுங்குதற்கு வேறு இடமில்லை என்றும் பரமாகாய வெளியில் சிவவொளியோடு ஆன்மவெளி பொருந்தும் ஆதலால் என்னைப் பொருளாகக் கொண்டு இத்தன்மை கருதி அருள் நீரால் ஆட்கொள்வாய் என

‘‘சத்த முதலைந்தும் தன்வழித் தான் சாரிற்
சித்துக்குச் சித்தன்றிச் சேர் விடம் வேறுண்டோ
சுத்த வெளியிற் சுடரிற் சுடர்சேரு
மத்த மிதுகுறித் தாண்டுகொ எப்பிலே”

எனத் திருமந்திரத் திருப்பாட்டில் எடுத்து இயம்பியுள்ளார். ஆண்டு கொள் அப்பிலே என்பது அருள் நீரால் ஆட்டித் தூய்மை செய்வாயாக என்ற வேண்டு கோளே. ஆன்மா தூய்மையுறச் சிவனோடு கலக்கும் என்பதே சாரம். திருநாவுக்கரசு நாயனாரும், “அத்தா உன் அடியேனை அன்பாலார்த்தாய் அருள் நோக்கித் தீர்த்த நீராட்டக் கொண்டாய்’’ என்று

இறைவனின் திருக்கருணையை வியந்தது நோக்கற்பாலது.

இறைவன் நம்பத் தகுந்தவன். எல்லாப் பொருள்களாகவும் உள்ளவன். தேவர்களாற் போற்றப்படுந் தலைவன். இன்ப வடிவானவன். சீவர்களது இன்பத்தில் பொருந்தி மகிழ்கின்ற அன்பு வடிவானவன். அன்பே சிவன். இத்தகை இறைவனை யாரும் அறியாது இருக்கின்றனரே என்று

"நம்பனை நான விதப்பொரு ளாகுமென்
றும்பரில் வானவர் ஓதந் தலைவனை
இன்பனை இன்பத் திடைநின் றிரதிக்கும்
அன்பனை யாரும் அறியகி லாரே"

எனத் திருமூலர் வருந்துவதுடன் நில்லாது, "பயனுறு கண்ணியர் போகத்தினுள்ளே பயனுறு மாதிப் பரஞ் சுடர்ச் சோதி" என்று மற்றுமோர் திருமந்திரத்துள் விதந்துள்ளனர். இவ்வாறே அப்பரும் "மடவாரோடும் பொருந்தணைமேல் வரும் பயனை" என இறை இன்பத்தை நயந்தார். இறைகளோடிசைந்த இன்பம் இன்பத் தோடிசைந்த வாழ்வென்பது சைவ சமய வாழ்வாகும். "எண்ணுவார் நெஞ்சில் நண்ணுவான் ஈசன்", "நணுகில் அகல் கிலன்நாதன்" என்பது சைவசமயக் கருத்தாகும். கடவுளின் உண்மைத் தன்மையையும் கடவுள் வழிபாட்டின் இன்றியமையாமையையும் இனிதறிந்து விளக்கும் பெருமை சைவ சமயத்திற்கு உண்டு.

ஒழுக்கமற்றோர் இறையருளைப் பெற்று இன்புறார். இறைவனை நடுநாயகமாக உள்ளவர் ஒழுகத்தால் விழுப்பம் பெறுவர். இறைவனை, நீதியை நிறைவெனக் கொள்வதால் நீதி தவறாநெறி முறையில் வாழ்வது இறைவழியென்பது அறியற் பாலது. எத்தெய்வத்தையும் வழிபடுவதற்கு முன் நல்லொழுக்கத்தில் தம்மை நடத்திக் கொள்ள வேண்டும். இது சிவஞான சித்தியாரில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

"ஒழுக்கம் அன்பு அருள் ஆசாரம் உபசாரம் உறவு சீலம்
வழுக்கு இலாத் தவந் தானங்கள் வந்தித்தல் வணங்கல் வாய்மை
அழுக்கு இலாத் துறவு அடக்கம் அறிவொடு அர்ச்சித்த லாதி
இழுக்கு இலா அறங்கள் ஆனால் இரங்குவான் பணி யறங்கள்"

ஒழுக்கம் முதலிய நன்மைகளை ஒருவன் அநுட்டித்துவரின் முதல்வன் அவற்றைத் தன்பணியாக ஏற்றுப் பயனளிப்பன்.

இறைவழிபாடு பயன் கருதிச் செய்யப்பட்ட போதிலும் பயன்கருதா வழிபாடே சிறப்பானதாகும் சிறப்பொடு வழிபாடு செய்யுந் திருத்தொண்டரைச் சேக்கிழார் சுவாமிகள் பெரியபுராணத்துள்

மனதில் வஞ்சகம், அழுக்காறு முதலிய மாசுடையவர்கள் கூறும் இனிய சொற்கள் உண்மையான இன்சொல் ஆகமாட்டா. மனத்தில் மாசு இல்லாது கூறும் சொற்களே இன் சொற்களாம். மனத்தூய்மை கொண்டே இன் சொற்களென்று உறுதி செய்ய முடியும்.

-திருமுருக கிருபானந்த வாரியார்.

"கேடும் ஆக்கமுங் கெட்ட திருவினார்

ஓடுஞ் செம்பொனும் ஒக்கவே நோக்குவார்

கூடும் அன்பினிற் கும்பிடலே அன்றி

வீடும் வேண்டா விறலின் விளங்கினார்"

எனக் கூறுவதால் இத்தொண்டர்கள் வழிபாட்டு நெறியை வழுவாநெறியாகக் கொண்டனரேயன்றி எதையும் பிரதியாக அவர்கள் எதிர்பார்க்கவில்லை என்பது அறிய முடிகின்றது. மேலும் சேக்கிழார் சுவாமிகள் அவ்வடியரை

"ஆரங் கண்டிகை ஆடையுங் கந்தையே

பாரம் ஈசன் பணி அல தொன்றிலார்

ஈர அன்பினர் யாதுங் குறைவிலார்"

என அவரது துறவுத் தன்மையை விளக்கியுள்ளார்.

பூவும் நீருங் கொண்டு வழிபடுதல் சைவமுறையாகும் "சலம் பூவொடு தூபம் மறந்தறியேன்" என்றார் அப்பர். "பொன்னடியே பரவி நாளும் பூவொடு நீர் சுமக்கும் நின்னடியார் இடர்களையாய் நெடுங்களம் மேயவனே" என்றார் திருஞான சம்பந்தர்.

சைவசமயம் பிறசமயங்களை இகழுந் தன்மையதன்று. இதனால் உண்மைச் சமயம் என்ற தகுதி இதற்குண்டு. சமயங்களும் சமய நூல்களும் ஒன்றோடொன்று மாறுபட்டனவாயும் பலவாயும் இருத்தல் நியதி. எல்லாச் சமயத்தவர் கூறும் பொருளியல்புகளும் தனித்தனி ஒவ்வோர் உண்மை நெறியை விளக்குவனாய் அமையும். இவ்வுண்மைகளை ஒருங்குசேர எந்தச் சமயங் கூறுமோ அதுவே உண்மைச் சமயமாகும் இத்தகைய சமயப் பொருளை உணர்த்தும் நூலே உண்மை நூலாக அமையும். இச்சமயங்களும் அவை கூறும் பொருளியல்புகளும் வேதாகமங்களிலே அடங்கியிருத்தல் காணலாம். வேதாகமங்கள் சிவனடியிலே அடங்குதல், "வேதமோதி வெண்ணூல் பூண்டு வெள்ளை எருதேறிப் பூதஞ் சூழப் பொலிய வருவார் "என்பதால் அறியப்படும். எனவே சிவனடியை அடைவிக்கும் சைவ சித்தாந்தமே உண்மைச் சமயமாகும். அச்சமயப் பொருளை விளக்கும் வேதாகமங்களே தெய்வ நூல்களாகும். சிவஞான சித்தியார் இவ் வுண்மை நிலையை

" ஓதுசம யங்கள் பொரு ளுணரு நூல்கள்

ஒன்றோ டொன் றொவ்வாம லுளபலவு மிவற்றுள்

யாதுசம யம்பொருணூல் யாதிங்கென்னில்

இதுவாகு மதுவல்ல தெனும் பிணக்க தின்றி

நீதியினா லிவையெல்லாம் மோரிடத்தே காண

நின்றதியா தொரு சமய மதுசமயம் பொருணூல்

ஆதலினா லிவையெல்லாம் மருமறையா கமத்தே

யடங்கியிடு மவையிரண்டு மரனடிக்கீ ழடங்கும்"

என ஐயத்திரிபறக் கூறுகின்றது.

எத்தெய்வத்தை வழிபடினும் அங்கே சிவனாகிய முழுமுதற் கடவுளே பயன் கொடுப்பான் என்பது மேன்மை கொள் சைவத்திலே மிகச் சிறப்பாகக் கூறப்படுகின்றது. "விரிவிலா அறிவினார்கள்

வேறொரு சமயம் செய்தே எரிவினாற் சொன்னாரேனும் எம்பிராற் கேற்றதாகும்'' என்பது அப்பர் திருவாக்கு. இது,

"யாதொரு தெய்வங் கொண்டீ ரத்தெய்வ மாகியாங்கே
மாதொரு பாக னார்தாம் வருவர்மற் றத்தெய் வங்கள்
வேதனைப் படுமி றக்கும் பிறக்குமேல் வினையுஞ் செய்யும்
ஆதலா னிவையி லாதா னறிந்தருள் செய்வ னன்றே

என்ற சித்தியார் பாடலுள் சிறப்புடன் கூறப்பட்டுள்ளது. சிவன் ஆதியுமந்தமுமில்லா அரும் பெருஞ் சோதி என மணிவாசகராற் பாடப்பட்டமையும், "பிறவாயாக்கைப் பெரியோன்'' எனச் சிலப்பதிகாரத்துள் கூறப்பட்டமையும் கருத்திற் கொள்ள வேண்டும்.

மனிதப் பிறவி "இனித்தமுடைய எடுத்த பொற்பாதமுங் காணப் பெற்றால் வேண்டுவதே இம்மாநிலத்தே" என்றார் நாவுக்கரசர். சைவ சித்தாந்த நெறியின் மூலம் இறைவனை அடையலாம்; சைவ சித்தாந்த நெறியை அடைதல் மிகவும் அரிது. ஆணவங் கன்மம் மாயை ஆகிய மும்மலங்களைப் போக்கி வீடுபேறு அடைவதற்கு வாயிலாய் அமைவது சித்தாந்த நெறி. சிவனை வழிபடுதலே ஒரே ஒரு உபாயம்; சிவாய நமவென்று சிந்தித்திருப்போர்க்கு அபாயம் ஒரு நாளுமில்லை. உபாயம் இதுவே மதியாகும். இதனால் இதோ சித்தியார் உரைக்கின்றது

சிவாய நமவென்று சிந்தனை செய்து அபாயமின்றி வாழ.

"வாழ்வெனும் மையல் விட்டு வறுமையாஞ் சிறுமை தப்பித்
தாழ்வெனுந் தன்மை யோடுஞ் சைவமாஞ் சமயம் சாரும்
ஊழ்பெற லரிது சால வுயர் சிவ ஞானத் தாலே
போழிழ மதியி னானைப் போற்றுவா ரருள்பெற் றாரே

ஒருவனுக்கு செல்வத்தினால் உண்டாகும் நானெனும் மயக்கம் ஒழிய வேண்டும். வறுமையிற் சிறுமை நீங்கி வறுமையிற் செம்மை வேண்டும். அடிமை என்ற மனப்பாங்கு மலர வேண்டும். இத்தகை நிலைபெற அரிய சைவசமயஞ்சாரும் புண்ணியம் பெறவேண்டும். மேலான சிவநெறி நின்று சிவனை வழிபடுவோரே அருள் பெற்றோராகக் கொள்ளப்படுவர். இவர்களே அவனருளாலே அவன் தாழ் வணங்கிச் சிந்தை மகிழ்பவர் முந்தை வினைமுழுதும் ஓய வழிபடுவர் இவரே.

சமயத்தால் மக்கள் ஒருவரோடொருவர் மோதவொண்ணாது என்ற பெருமை சைவசமயத்திற்கு உண்டெனை முன்னர் கூறினோம். சைவசமயம் சாதியென்ற புன்மையையும் ஒழிப்பதாகும். "அங்கமெல்லாங் குறைந்தழுகு தொழுநோயராகி ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனுங் கங்கைவார் சடை கரந்தார்க் கன்பராகில் அவர்கண்டீர் நாம் வணங்குங் கடவுளாரே'' என்ற திருநாவுக்கரசர் வாக்கு இக்கருத்தை விளக்குகின்றது. குலச் சிறை நாயனார் புராணம் இக்கருத்தை மேலும் உறுதிப்படுத்துவதைச் சேக்கிழார் சுவாமிகள் பின்வருமாறு கூறுகின்றார்.

"குறியில் நான்கு குலத்தின ராயினும்
நெறியின் அக்குலம் நீங்கின ராயினும்
அறிவு சங்கரற் கன்பர் எனப்பெறில்
செறிவு றப்பணிந் தேத்திய செய்கையார்.

எனவே சைவத்தின் மேலாஞ் சமயம் வேறில்லை என்பது சாலவும் பொருந்து மன்றோ.

# குலச்சிறை நாயனார்

– சிவ சண்முகவடிவேல் –

திருச்சிற்றம்பலம்

*வெற்றவே அடியார் அடிமிசை வீழும்*
*விருப்பினன் வெள்ளை நீ றணியும்*
*கொற்றவன் தனக்கு மந்திரி யாய*
*குலச்சிறை குலாவிநின் றேத்தும்*
*ஒற்றை வெள் விடையன் உம்பரார் தலைவன்*
*உலகினில் இயற்கையை ஒழித்திட்*
*டற்றவர்க் கற்ற சிவனுறை கின்ற*
*ஆலவா யாவதும் இதுவே*

*(3ம் திருமுறை)*

பொன்றாத புகழ் பூண்டது பாண்டிநாடு ஆங்கு செந்நெல் வயல் செழித்திருக்கும் கரும்புச் செய்கை கண் கவரும். அருகாகச் செழித்த கமுகமரங்கள் கொண்ட புறவிடங்கள் பொலிந்திருக்கும்.

மணமேற்குடி நகரம் வளஞ் சிறந்தது. குலச்சிறையார் அப்பகுதிக்கு முதல்வர் மனத்திண்மைக்கு இருப்பிடமானவர் குலச்சிறையார். சிவத் தொண்டில் வழுவாது ஒழுகும் திருத்தொண்டர் அவர். அவருடைய சிறந்த குணம் – ஒருவர் சிவன் அன்பு பெறக் காரணமானர் என்று அறிந்தால் அவரிடத்தில் மனமகிழ்ச்சியோடு அன்பு செலுத்துவார்.

எவராக இருப்பினும் ஒழுக்கம் உள்ளவராக இருப்பினும் ஆதரிப்பார். நெறி முறை பிறழ்ந்தவர்களாயினும் ஆதரிப்பார். ஆனால் அவர் அறிவு சிவபெருமானிடத்தில் நிலைத்திருக்க வேண்டும். அதனால் உலகவர்கள் விரும்பும் நலன்களைக் கொண்டவர்களாக இருந்தாலும் – உலகவர்கள் விரும்பாத தீமைகளை உடையவராயினும் செஞ்சடைப் பெருமானிடத்தில் நெஞ்சு வைத்தவர்களாயின் – அவர்களைக் குலச்சிறையார் ஏத்துவார். போற்றுவார். இன் மொழி பேசிக் கொண்டாடுவார்.

*உலகர் கொள்ளும் நலத்தின ராயினும்*
*அலகில் தீமைய ராயினும் அம்புலி*
*இலகு செஞ்சடை யார்க்குரி யாரெனில்*
*தலமு றப்பணிந் தேத்தும் தகைமையார்.*

*(குல. புரா : 5.)*

என்பது சேக்கிழார் வாக்கு.

இன்னும் சிவ அன்பு மேம்பட்டவர் பலராக வந்தாலும் ஒருவராக உண்ப வேண்டிவரினும் வரவழைப்பார். உபசரித்துப் பண்புவழாது விருப்போடு அமுதூட்டும் நன்மனம் படைத்தவர் குலச்சிறைநாயனார்.

நின்ற சீர் நெடுமாற நாயனார் ஆகிய அரசருக்குச் சிறப்புறு முதன் மந்திரியாக விளங்கியவர். இடைவிடாது சிவபெருமானுடைய திருப்பாதங்களையே வாழ்த்தும் இயல்பினை உடையவர். பன்னரும் புகழ்ப் பாண்டி மாதேவியாருடைய சிவப்பணிக்கு மெய்ம்மைத் தொண்டராக மிளிர்ந்தவர்.

சமணர்களுடைய பொய்ம்மையை நீக்கவும் பாண்டி நாடு திருநீற்றுச் சார்பில் ஒழுகவும் சீர்காழி ஆளுடைய பிள்ளையாரது பொற்பாதங்களைச் சிரசிற் சூட்டி மகிழ்ந்த சிறப்பினை உடையவர்.

திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாரால் அருளிச் செய்யப் பெற்ற 'ஆலவா யாவதும் இதுவே' என்னும் திருப்பதிகத்தில் – மங்கையர்க்கரசியாருக்குச் சமானமாக ஐந்து திருப்பாடல்களிலும் திருக்கடைக் காப்பிலும் போற்றப்படும் சிறப்புடையவர். சமணர்கள் ஒட்டிச் செய்த வாதப்படி கழுவேற்றியவர்.

*திண்மை தரும் திருத்தொண்டில் வழுவாதவர்*
*குலச்சிறை நாயனார்.*

திருவிளையாடற் புராணம்

# தடாதகைப் பிராட்டியார் திருமணம்

– கூடலான் –

திருவருள் வடிவினராகிய தடாதகைப் பிராட்டியார் திருமணப் பருவத்தை அடைந்தார். அன்னை காஞ்சனமாலை பிராட்டியாரை நோக்கி, ''உனக்குத் கன்னிப் பருவம் வந்தெய்தியது. இன்னமுந் திருமணம் ஆகவில்லையே''. என்று சொல்லித் துன்பப்பட்டார். அப்போது தடாதகைப் பிராட்டியார், ''அன்னையே! உங்கள் மனத்துத் தோன்றியுள்ள எண்ணம் நிறைவேற வேண்டிய காலம் வரும் போது தானே நிறைவாகும். யான் இப்பூமண்டலத்தின் எட்டுத் திக்குஞ் சென்று வெற்றி கண்டு மீள்வேன்,'' என்று சொல்லித் திக்விஜயத்திற்குத் தயாரானாள்.

பல வகையான வாத்தியங்களும் ஒலிப்ப, வெற்றிச் சங்கு முழங்க, யானை, குதிரை, தேர், காலாட் படைகளுடன் பிராட்டியார் புறப்பட்டார். வெண் கொற்றக் குடை நிழற்ற, மங்கையர் சாமரை வீச, அந்தணர் ஆசிகூற, ஒரு புறங் கீதவிசை ஒலிப்ப, கயற் கொடி, விற்கொடி, மீன்கொடி பக்கலிற் சென்று கொண்டிருக்க பிராட்டியார் இவர்ந்த தேர் சென்று கொண்டிருந்தது. சுமதி என்னும் பெயருடைய அமைச்சர் படையை நடத்திச் சென்றார். வடக்கே கயபதி முதலிய அரசர்களை வென்று திக்குப் பாலகர்களைக் கீழ்ப்படுத்தி, எல்லோரிடமுந் திறை கொண்டு திருக்கைலையை நோக்கித் தொடர்ந்தனர். திருக்கைலாய மலையைப் படை சூழ்ந்து கொண்டதும் திருமலைக் காவலர்கள் விரைந்து சென்று திருநந்தி தேவரிடம் செய்தி சொல்லினர். திருமலையை வளைந்து கொண்டோரை அழிக்கும்படி திருநந்தி தேவர் பூதகணங்களை ஏவினர். பூதகணங்கள் பிராட்டி படையொடு போர் செய்து தோற்று மீண்டார்கள். அது கண்ட திருநந்தி தேவர் கைலாசபதியை வணங்கி நடந்தவற்றை விண்ணப்பஞ் செய்தார். பரமசிவன் புன்னகை பூத்துப், பினாக வில்லையும் ஏனைய படைக் கலங்களையும் திருக்கரத்தேற்று, இடப வாகன மீதமர்ந்து, யுத்தகளம் சென்றார். அங்கு பெண் சிங்கமென நிற்கும் தேவியாருடைய வீரத்தையும், திருவுருவத்தையும் எதிர் கண்டார். தடாகைப் பிராட்டியாரும் மழுப்படை ஏந்திய திருக்கரத்தையும் திருநீறணிந்த, பூணூலணிந்த திரு மார்பையும், சடா முடியையும், தன்னையே நோக்குகின்ற பெருங் கருணைத் திருநோக்கையும், தன் வலப்பாதியைக் கொண்ட உருவையும் அங்கே கண்டார். கண்டதும் நடுவிருந்த ஒரு தனம் மறைந்தது. உடனே உள்ளத்தில் நாணமும், மடமும், அச்சமும் தோன்ற, முன்னை அன்பு குடி கொள்ள, அளகம் பிடரியில் தாள, கண்கள் புறவடியை நோக்கத் தலை குனிந்து நின்றார். முன்னே நிகழ்ந்ததொரு அசரீரி வாக்கை அறிந்திருந்த அமைச்சர் சுமதி, பிராட்டியை வணங்கித் ''தாயே! இங்கு நிற்குங் கைலாயபதியே பிராட்டியாரின் மணவாளன்'' என்றான். அது கேட்ட எம் பெருமாட்டி பேரன்பு பெருக நின்றாள். கைலாயபதி பிராட்டியை நோக்கி, ''திக் விஜயத்தின் பொருட்டு நீ புறப்பட்ட வேளையிலிருந்து யாம் உன்னைப் பிரியாது தொடர்ந்து வந்தோம். இன்றிலிருந்து எட்டாவது நாள்

வரும் சோமவாரத்தில், சுப லக்கனத்தில் உன்னைத் திருமணஞ் செய்ய வருவோம். நீ மதுரைக்குப் போ", என்று திருவாய் மலர்ந்தருளினார். அது கேட்ட பிராட்டியார் மதுரையை அடைந்தார்.

அமைச்சர்கள் வேண்டிய ஒழுங்குகளைக் கவனித்தார்கள். எல்லாத் தேயங்களுக்கும் மணவோலை போக்கினர். மதுரை மாநகர மெங்கும் மணமுரசு அறைவிக்கப்பட்டது. செய்தியறிந்து மக்கள், மற்றைத் தேய மன்னர்கள் எல்லோருமே களி பேருவகை கொண்டனர்.

மதுரை மாநகரம் அலங்காரத்திற்குள்ளாகியது. திருமணத்திற்கெனத் திருக்கல்யாண மண்டபமும் அமைக்கப்பட்டது. அந்த மண்டபத்தே வருகிறவர்களின் தகுதிக்கேற்ப ஆசனங்களும் அமைக்கப்பட்டன. சிவபெருமானும் தடாதகைப் பிராட்டியாரும் எழுந்தருளவென்று விசேட நவரத்தின சிங்காசனம் செய்விக்கப்பட்டது.

மணவோலை பெற்ற மன்னர்கள் அதனை வணங்கினார்கள். தலை மீதுயர்த்திக் கொண்டாடினார்கள். கொண்டு வந்த தூதுவர்களைக் கௌரவித்தனுப்பினார்கள். தத்தம் நாடுகளிற் கிடைக்கும் விசேட வளங்களுடன் மதுரையை நோக்கி விரைந்தார்கள். முதலிலே பிராட்டியைத் தரிசித்து வணக்கம் செலுத்திக் கொண்டனர்.

தடாதகைப் பிராட்டியார் திரும்பிய பின் சிவபெருமான் கைலாயத்தை அடைந்தார். கண அதிபர்கள் உருத்திர தேவர்களுக்குத் திருமணச் செய்தியைச் சொல்ல, அவர்கள் மகிழ்வடைந்து வீரபத்திரர், ஐயனார் முதலிய உருத்திரர்களுக்கும், பிரமா, விஷ்ணு, இந்திரன் முதலிய தேவர்களுக்கும், வியாக்கிரபாதர், பதஞ்சலி, அகத்தியர் முதலிய முனிவர்களுக்கு தெரிய வைத்தனர். எல்லோரும் திருக்கைலையை வந்து சேர்ந்தனர். இவ்வண்ணம் வந்துள்ளமை பற்றிய தகவல் திருநந்தி தேவராற் சிவபெருமானுக்கு அறிமுகம் செய்யப்பட்டது. அனுமதி பெற்று உள்ளே வந்தோர் சிவபெருமானை வணங்கினர். எம் பெருமான் தம்மை வணங்கியோருட் சிலரை ஒரிரு வார்த்தை கொண்டும், சிலரைப் புன்முறுவலாலும், சிலரைக் கடைக்கண் பார்வையாலும், சிலரைத் தலை அசைப்பினாலும், அவரவர் தகுதிக்கேற்பத் திருவருள் சுரந்து, திருமணக் கோலங் கொள்ளும் பொருட்டு ஒரு மண்டபத்துட் புகுந்தார். திருக்குறிப்பறிந்த குபேரன் உடன் பின்னே சென்று மெய்யன்புடன் மணமகனுக்குரிய அலங்கார வேலைகள் செய்து பெரும்பேறு பெற்றான். மணமகன் இடப வாகனத்தின் மீது கற்பகப் பூமாரி பொழிய, மங்கல வாத்தியங்கள் முழங்க, அரம்பையர் நடனமாட, முனிவர்கள் கை குவித்து வணங்கி அருகே செல்ல எல்லாக் கௌரவங்களுடனும் மதுரையைச் சென்றடைந்தார்.

ஈழமண்டல சதகமும் உரையும்

*மநுநீதி கண்ட சோழர் திருத்தொண்டர் பெரிய புராணத்து விதந்து கூறப்பட்ட திருவாரூர் மநுநீதி கண்ட சோழர். இவருடைய திருக்குமாரர் வரராம தேவசோழர். இவருக்கு வீதி விடங்கன் என வேறொரு திரு நாமமும் உண்டு. இவர் தான் திரிகோண மலைச் சிவாலயத்தை முதன் முதற் கட்டுவித்தவர். இவருடைய திருக்குமாரர் குளக் கோட்டு மகாராசா என்பவர். இவர் பிறக்கும் போது நெற்றியிலே ஒரு கொம்போடு பிறந்தமையாற் குளக் கோடர் என நாமகரணஞ் செய்யப் பெற்றார். குளம் - நெற்றி, கோடு - கொம்பு. இவர் திரிகோணமலைக்குச் சென்று கோணேச நாயகருக்கும் பிடியன்ன மென்னடை என்னுந் திரு நாமத்தோடு மாதுமை யென்னும் மற்றொரு திருநாமத்தையுமுடைய தேவிக்கும், பிதாவின் திருப்பணிக்கு மேல் அனேகந் திருப்பணி செய்து, கந்தளாய்க் குளம் என்று தற்போது பெயர் வழங்கும் பிரமாண்ட யந்திரவாவியையும், கோயில் வயலின் நீர்ப் பாய்ச்சலுக்காகக் கட்டுவித்து வேறும் அனேக சிவகைங்கரியங்களையுஞ் செய்து கொண்டு திருவாரூக்குத் திரும்பாமல் அங்கேயேயிருந்து முத்தியடைந் தருளினார்.*

மதுரை நகர்ப்புறத்தே பிராட்டியாரின் அமைச்சர்கள், சேனாதிபதிகள், பிரதானிகள், வருகை தந்திருந்த மன்னர்கள் அனைவரும் எதிர் கொண்டு வணங்கி வேண்டிய உபசரிப்புகளுடன் அழைத்துச் சென்றனர். அந்தணர் குடும்பத்தினர் தருப்பையும் அரசிலையும் தோய்த்த நீரை எல்லோருக்கும் படும்படியாக வீச, மங்கையர் அட்ட மங்கலம் ஏந்தி வர எம் பெருமான் மாளிகை முன் சென்றார். அங்கே வாத்தியங்கள் மிக்கொலித்தன. அரம்பையர் கற்பூர தீபத்துடன் சிவபெருமானை மும்முறை வலம் வந்தனர்.

திருநந்தி தேவரின் கையைப் பற்றியபடி சிவபெருமான் இடப வாகனத்தினின்றும் இறங்கி, பிரம்ம விஷ்ணுக்கள் இருபுறமும் வர, நறுமணங்கள் பரப்பிய நடைபாதையில், தேவர்கள் பூமாரி பொழிய உள் எழுந்தருளினார். அங்கே மகளிர் சூழக் காஞ்சனமாலை பொற் கரகத்துள்ள கங்கை நீராற் கைலாசபதியின் திருவடிகளை விளக்கி, அத்தீர்த்தத்தைத் தன் சிரசிற் தெளித்து உட்கொண்டாள். பின்னர் ஈரம் புலர்த்திப் பனிநீர் விட்டுக் கஸ்தூரி கலந்த சந்தனக் குழம்பை அணிந்து சிரசின்மீது கைகுவித்து நின்று, "பரம கருணாநிதியாகி சுவாமி! யான் அருமையாகப் பெற்ற என் கன்னிப் பெண்ணை விவாகஞ் செய்து இப்பாண்டி நாட்டையும் அரசாளுக" என்று விண்ணப்பம் செய்து நின்றாள். சிவபெருமான் திருவுளம் இசைந்து புன்னகை பூத்து மண்டபத்தையடைந்து இரத்தின சிங்காசனத்தமர்ந்து எல்லோரையும் அமரும்படி திருக்கடைக்கண் சாத்தினார்.

மகளிர் பிராட்டியை அலங்கரித்து இலக்குமி சரஸ்வதி என்போர் சோபனஞ் சொல்லி வாழ்த்த மண்டபத்தை அடைந்து சிவபெருமானைக் கண்டதும் நாணி ஒதுங்கி அவர் பக்கலில் எழுந்தருளி இருந்தாள். விஷ்ணு தடாதகைப் பிராட்டியாரின் திருக்கரங்களைச் சிவபெருமான் திருக்கரங்களில் வைத்து வேத மந்திரஞ் சொல்லித் தத்தம் செய்தார். தேவர்கள் பூமாரி பொழிந்தனர். அரம்மையர் ஆடினர். விஞ்சையர் பாடினர். எல்லோரும் பரவசமடைந்தனர். அங்குள்ளோர் அனைவரும் திருக்கல்யாண தரிசனத்தாலாகிய பேரின்ப வெள்ளத்தில் மூழ்கினார்கள். இலக்குமி சரஸ்வதி இருடி பத்தினியர் மங்கலம் பாடினர். பிரமதேவர் அக்கினிகாரியம் செய்தார். சிவபெருமான் பிராட்டியாருக்குத் திருமங்கலியந் தரித்துப் பாணிக்கிரகணஞ் செய்தார். பின்பு தம் மனைவியுடனாகிப் பொரியை வாங்கி ஓமஞ் செய்து முனிவர்களுக்குத் தானங் கொடுத்து அக்கினியை வலம் வந்து பிராட்டி திருவடியைத் தன் திருக்கரத்தினாலே பற்றி அம்மி மேல் வைத்து, அருந்ததி பார்த்து, உலகத்தாரை நினைந்து எல்லாச் சடங்குகளையும் நிறைவு செய்து மணவறையிலே புகுந்தார். பின்னர் திருக்கல்யாண மண்ட பத்தையடைந்து எல்லோருக்கும் விடை கொடுத்து அருளினார்.

பின்னர் சிவபெருமான் சௌந்தர பாண்டியனாகிச் சங்கு கன்னர் முதலிய கணநாதர்கள் முன்னை வடிவு நீங்கி மானுடராகி ஏவல் செய்ய அரசு செய்தருளினார். உலகத்தைக் காவல் செய்யும் மன்னர்கள் சிவனைப் பூசித்தல் நெறி என்று அரசர்களெல்லாம் துணிந்து உய்யும் பொருட்டுத் தாமும் ஆலயங் கட்டுவித்து சிவலிங்கந்தாபித்து அதனைச் சிவாகம விதிப்படி பூசை செய்து கொண்டும் சோமசுந்தரக் கடவுளை மூன்று காலமும் தரிசனஞ் செய்து கொண்டும் செங்கோல் நடத்தினார். தம்மைத் தாமே பூசித்து இம்மை மறுமைகளை அடைய நின்ற சிவத்தின் பெருமையை யார்தான் அளக்கவல்லார்.

(ஆதாரம் : நாவலர் திருவிளையாடற் புராண வசனம்)

திருவாசகச் சிந்தனை

# திருப்பொற் சுண்ணம்

– பண்டிதர் சி. அப்புத்துரை–

பொற்சுண்ணம் – வாசனைப் பொடி. முழுகுவதை நோக்கமாகக் கொண்டு மஞ்சள் முதலியவற்றை உரலிலிட்டு இடித்து ஆக்கப்படும் முழுக்குப் பொடி என்பர் பண்டிதமணி நவநீத கிருஷ்ண பாரதியார் அவர்கள். பலவகை மணப் பொருள்களை உரலில் இட்டு இடிக்கப்படுவது பொற்சுண்ணம். இது பொன் போன்ற நிறமுடையது. சிறிதளவு பொன்னும் சேர்க்கப்படுகின்றது, என்று கூறுவர் ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர். இங்கு இறைவனைக் கருத்திருத்தி இடிக்கப்படுகின்ற பொடி என்ற காரணத்தால், தெய்வீக உணர்வைப் புலப்படுத்தும் திரு என்னும் அடைமொழியுஞ் சேர்ந்து திருப்பொற்சுண்ணம் என்றாயிற்று. முன்னைய பதிகத்தில் அம்மானை ஆடலைச் சுவைத்தோம். இங்கு உரலில் இடித்துப் பாடுதலைப் பார்க்கின்றோம்.

இப்பதிகம், அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம் என்னும் பாவினத்தைச் சேர்ந்த இருபது திருப்பாடல்களைத் தன்னகத்துக் கொண்டது. இந்த விருத்தப்பாக்கள் வெண்டளை தழுவி வந்துள்ளமை கவனிக்கத் தக்கது. இப்பாடல்களின் திரண்ட பொருள் ஆனந்த மனோலயம் என்று திருவாசகத் திருவுள்ளக்கிடை குறிப்பிடும். அதாவது சிவானந்த உணர்வுடன் ஆன்மாவின் உணர்வு ஒன்றியிருத்தல் என்பது.

பாடற் பொருள் கண்டின்புறுவோம்: முத்துமாலை, பூமாலை என்பவற்றைத் தொங்க விட்டு, தானியங்கள் முளைக்க விடப்பட்ட மட்கலசம், தீபம், தூபம் என்பவற்றையும் வையுங்கள், சக்தியும் சோமியும், நிலமகளும், சரஸ்வதியோடுடனாகிப் பல்லாண்டு பாடுங்கள். சித்தி, கௌரி, பார்வதி, கங்கை என்போர் சாமரை வீசுங்கள். அழகு வாய்ந்த சடாபாரத்தையுடைய எம் பெருமானுக்கு நல்ல நயமான சுகந்தப் பொடி இடிக்க வேண்டும். அன்பிற்குரிய தொண்டர்களைப் புறத்தே அழையுங்கள்; கூத்தாடுங்கள்; போற்றுங்கள்; அழகான விபூதியை அணிந்து, தரையை மெழுகிப் புனிதமான பொற்பொடியைச் சிந்தி, முத்து முதலிய பொருள்களைப் பரப்பி, இந்திரனது கற்பக தருவை நாட்டி, அழகிய தீபங்களை எங்கும் ஏற்றி, இடபக் கொடியை உயர்த்தி, உலக்கைகளுக்கு மணிவடங் கட்டி, உரல்களுக்குப் பட்டாடை சுற்றுங்கள்.

அன்புள்ளங் கொண்ட அடியவர்கள் நீண்ட காலம் வாழ்வார்களாக என்று வாழ்த்துங்கள். உலகு புகழும் திருவேகம்பன் திருக்கோயிலைப் புகழ்ந்து பாடுங்கள். பிரம்மாவும் திருமாலும் அறுகெடுத்துப் பசு நெய்யிற் தோய்த்துத் தெளிக்கின்ற பணியைச் செய்வர். உலகம் முழுவதுமே உரலாக மாறினும் இடிப்பதற்கு அந்த உரல் போதாதெனும் அளவிற்கு எல்லோரும் இடிப்பாராயினர்.

கைவளை தோள்வளை என்பன ஆரவாரிக்க, அன்பர்கள் கூட்டம் ஆரவாரிக்க, பிரகாசமான பெரிய கண்களையுடைய அழகிய பெண்களே!

கோடுகளையுடைய வளையல்கள் ஒலிக்கவும், மார்பகங்கள் பூரிக்கவும் தோள்கள் தலைகள் நெருங்கி விளங்க அஞ்சலி செய்வோம். வையகம் உரலாக மகாமேருவை உலக்கையாக்கி உண்மை என்னும் மஞ்சளை நிறைய இட்டு, அழகிய திருப்பெருந்துறையில் இருப்பவனது திருவடிகளைப் பாடிப்பாடிச் செம்பொன் மயமான உலக்கையை வலக்கையிற் பிடித்துத் தலைவனாகிய தில்லையிலுறை சிவனது திருமுழுக்கின் பொருட்டு வாசனைப் பொடியை இடிப்போம்.

முத்துமாலைகளுடனாகித் தனங்கள் குலுங்க, அடர்ந்த கூந்தலிலுள்ள வண்டினம் எழுந்து ஆட, மனம் சிவனிடத்ததாகி ஆடக் கயல் மீன் போன்ற கண்கள் நீர்த்துளிகளை இடைவிடாது சிந்த, எம்பெருமானிடத்து அன்பு மென்மேலும் பெருக, இறைவன் கருணை விளங்கித் தோன்ற, அவன் திருமுழுக்கின் பொருட்டுப் பொற்சுண்ணம் இடிப்போம்.

நீலகண்டனைத், தேவர்க்கு அமிர்தம் போன்றவனை, மாணிக்கக் கூத்தனை, எளிதாக வந்து எமை ஆட்கொண்டவனை, பொய்யர்க்குப் பொய் போன்றவனை, மெய்யர்க்கு மெய்யானவனை, அவனைப் பாடிப் பொற் சுண்ணமிடிப்போம்.

மின்னல் போன்ற இடையையுடைய, பவளம் போன்ற உதடுகளை, கரிய கண்களை, வெண்மையான பற்களை, மென்மொழிகளைப் பொருந்திய பெண்களே! எனக்கு அமிர்தம் போன்ற எங்கள் அப்பன், எம்பெருமான், இவன் பார்வதி தேவிக்கு முறையே மணாளன், புதல்வன், தந்தை, மூத்த சகோதரன் ஆகவும் இருக்கின்றான். எமக்கு இறைவன்; அவன் சிவலோகத்தை மெச்சிப் பாடுவோம். கங்கை ஒலிக்கட்டும். சடா முடியிடத்ததாகிய பாம்பு சீறட்டும். ஞானக் கரும்பின் தெளிவு, அதிலிருந்து பெறப்படும் பாகு, நாடுதற்கரிய நன்மை, சுவை கெடாத தேன் மனதிற் புகுந்து தித்திக்க வல்ல இறைவனை உய்தலின் பொருட்டு அன்பர்களுடனாகி நாமும் செயக்கூடிய அடிமைத்திறம் பாடுவோம். தேவர்கள் கனவிலுஞ் சிவனைக் கண்டதில்லை. தாமரை மலர்போலுந் தன் திருவடிகளை எனக்குக் கனவிலுங் காட்டினான். அவனை அலங்கரிக்கும் தேனையுடைய கொன்றையைப் பாடுவோம். சிவபுரத்தைப் பாடுவோம். சடாமுடிக் கண்ணதாகிய பிள்ளைமதியைப் பாடுவோம். விடையைப் பாடுவோம். பிரமன் தலையைக் கிள்ளிப் பந்தாடியதை, சூரியன் பல்லை உடைத்ததை, யானையைக் கொன்று அதன் தோலை அணிந்ததை, யமனை உதைத்ததை, முப்புரங்களை எரித்ததை எல்லாம் பாடிப் பொற்சுண்ணம் இடிப்போம்.

சிவன் அணிந்துள்ள கொன்றை மலர் மாலையை, ஊமத்தம் பூவை, பிறைச் சந்திரனை, நல்லவர்கள் வாழும் தில்லையை, சிவன், இடுப்பு, கை கால்களை பாடிப் பொற் சுண்ணம் இடிப்போம்.

வேதமும் வேதப் பொருளுமானவனை, மெய்யும் பொய்யுமானவனை, ஒளியும் இருளும் ஆனவனை, துன்பமும் இன்பமும் ஆனவனை, குறையும் நிறையும் ஆனவனை, முதலும் முடிவுமானவனை நினைந்து பொற்சுண்ணமிடிப்போம்.

இங்கு காட்டப்பட்ட கருத்துக்கள் ஆன்ம சிவானந்த உணர்வு நெருக்கத்தினைத் தெளிவுபடுத்துகின்றன.

# சனி துதி

– வித்துவான் ச. சிவாநந்தையர் –

### காப்பு.

வந்தன் றுதிக்குந் தாதையுடன்
வணங்கக் காக்கு மாட்சியொடு
தந்தன் றுதிக்கு முகன்படைப்புஞ்
சகமே னிலையா தனவேண்டி
நொந்தன் றுதிக்கும் பலபொருளு
நோவா தமைய நுவன்மனமே
மந்தன் றுதிக்குஞ் சிறப்புதவு
மதமா முகத்தோன் மலர்ப்பதமே.

### வேறு.

இருவரத்தல மிடந்துவான் மேற்பறந் திரங்கிப்
பருவரத்தல மலரடி காட்டுவார் பவமா
மருவரத்தல மருமன்பர்க் கெனத்தரு மகவாந்
திருவரத்தலத் தமர்ந்தவ ரடிமுடி செறிப்பாம்.

### சபாபதி.

கூட்டு பேரொளிக் கனகமன்
றகத்தருட் குணத்தான்
மூட்டும் வல்வினைத் தளைப்படு
முயிர்த்தொகை முழுது
மாட்டு வாரென லாடிடுங்
குறிப்பிற் கண்டறிய
நாட்டு வார்புக ழோரெழு
பிறப்பினு நவில்வாம்.

### சிவகாமியம்மை.

அன்னை யத்தனைக் காட்டிடும்
புதல்வர்க்கென் றகிலம்
பன்னு மவ் வுரை தனக்கு மாமெனத்
தொண்டர் பரவப்
பொன்னின் மன்றகத் துயிர்க்கரு
ணடஞ்செயும் புனிதன்
றன்னை நோக்கிடு மலைமக
ளடித்துணை சார்வாம்.

### வரலாறு.

வருங்கொலைத்தொழின் மடங்க லுட்படப் புகாவகையா
னெருங்குறுஞ்சிறு நெறிகடிந் துள்ளன்பு நீடப்
பருங்கயிற்றிடைப் பிணித்து வன்கொடுவரி பாற்றி
யருங்கலைத்தொகை வளர்ப்பது நைமிசா ரணியம். 1.

அன்னமாவனத் தருந்தவச் சூதனன் றணுகச்
சென்னிமேன்மதி முடித்தவர் திருவடி சேவித்
தின்னறீர்ந்தவ ணுறைதரு முனிக்குழா மேத்தி
நன்னயச்சனி துதிக்கதை புகல்கென நவின்றார். 2.

வருந்துவெம்பவக் கருங்கடற் பட்டுழன் மாந்தர்
பொருந்துவெங்கதிர் மதலைசெய் கொடுந்துயர் போக்கித்
திருந்துநல்லரு டருந்துதி வருங்கதை செவிக்கு
மருந்துபோன்மெனச் சூதனாங் கறவர்க்கு வகுக்கும். 3.

அற்றைநாட்டிருக் கைலைமே லமர்முக் கணமலன்
கற்றைவார்குழ லம்பிகை கேட்டுளங் களிப்பப்
பற்றகன்றருண் மூழ்குறு மறிவினீர் பரிவிற்
சொற்றனன்சனி துதிவர லாறெலாந் தொகுத்து 4.

படியின்மேம்படு மயோத்தியாந் திருநகர் பரிக்கு
நெடியவேலவன் றசரதனெனும்பெயர் நிருபன்
மடிவிலாதமுச் சத்தியு மறுகுண மாண்பு
முடிவின்முக்கண னாமெனக் கொண்டிடு முதல்வன் 5.

கருவிராமனை யோடுறா தொருமகங் கண்டு
திருவிராமனை வாய்மையிற் பிறழ்வுறச் செய்யேன்
றருவிராமனை மீர்விடை யெனவனஞ் சார
மருவிராமனை மகவென வளித்திடு மன்னன். 6.

ஐவகைப்படு சுற்றத்து ளொன்றுபோ லமர்ந்து
மெய்வகைப்படு மங்கமைந் தெண்ணிடும் விறலோ
னுய்வகைப்படு பேரற முலகிய லொருவாக்
கைவகைப்படு நீதியி னிறைதரு கருத்தோன். 7.

தன்னுயிர்க்குறு துன்பமே யாமெனத் தரணி
மன்னுயிர்க்குறு துன்பெலா மாற்றிடு மதியோன்
முன்னிடும்புகழ் மாலையிட் டன்பொடு முயங்கி
நன்னிலக்குல மடந்தைதோண் மணந்துறு நாதன். 8.

பகைகடிந் துல காளுநாணி மித்திகர் பலரு
நகைபடுஞ்சனி கார்த்திகை நாளாந்த நண்ணி
முகைபடுந்தலை யுரோகிணிச் சகடத்துண் மூழ்குந்
தகைபடும்பகல் சிலபகல் கழியமேற் சாரும். 9.

ஆயவிச்சனியு ரோகிணிச் சகடத்து ளமர
மேயநாட்டொடு திருநக ரூரெலாம் விரவிப்
பாயவற்கடம் பன்னிரண் டாண்டுறப் பசியா
னேயமேம்படு முயிர்க்கெலாந் துன்பமே நிகழும். 10.

மண்ணுளோரலால் வானவர் தாமுமுண் மறுக
நண்ணுமாறுகண் டறிதியென் றடைந்தனர் நவில
வுண்ணடுங்கியவ் வேந்தனும் வசிட்டனொ டுசாவி
யெண்ணுமாமுனி வரர்க்கெலா மித்திற மியம்ப. 11.

கேட்டமாதவர் யோகமென் றவ்வயிற் கிளந்து
நாட்டுமற்றிஃ தயன்முதற் றேவர்க்கு நண்ணா
தீட்டுமச்சனி பயங்கடிந் திடுமென வியம்பப்
பூட்டும் வில்லொடு தசரத னெழுந்தனன் போர்க்கே. 12.

பரவுறுந்திசை பத்தினுஞ் செலத்தகு பணித்தே
ரிரவியாமென விவர்ந்தனன் விண்ணெறி யேகிக்
கரவினூற்றிரு பத்தொடு மைந்தெனக் கரையுந்
தரவியோசனை பானுமண் டலத்தின் மேற் சார்ந்தான் 13.

ஆண்டியங்கிடு முரோகிணிப் பின்புறத் தமரத்
தூண்டுதேர்நிறீஇக் கார்த்திகை நாளாந்தந் துன்னி
யீண்டுமச்சனிக் கெதிர்முக மாகியவ் வேந்தல்
காண்டகுஞ்சரா சனமெடுத் தேந்தினன் கைம்மேல். 14.

எடுத்தவில்லினா ணேற்றினன் யாவையு மிறுதிப்
படுத்திடும்படை தொடுத்த லுஞ்சனி யெதிர்பாரா
மடுத்ததன்குல மன்னவன் கேட்டுள மகிழக்
கடுத்தநெஞ்சொடு வெடிபட நகைத்திவை கழறும். 15.

மண்ணும்வானமு மதிக்குநின் விற்படை மாண்புந்
திண்ணமாயுறு மாண்மையு மெய்வலிச் சிறப்பு
நண்ணுமுன்னரே கேட்டறிந் தனன்கண்டு நயந்தே
னண்ணலேயிவ ணெய்திய தெதன்பொருட் டறைதி 16.

தேவராயினு முரகரே யாயினுஞ் செகமேன்
மேவநின்றிடு மானவ ராயினும் வேந்தே
யாவராயினு மென்ன ருளிகந்தவர் யாரு
மோவ லின்றியே பலவகைத் துன்பமு முழப்பார். 17.

அரிதியற்றிய பெருந்தவ மாட்சியு மடலும்
பெரிதுவந்தனன் வேண்டிய வரமெவன் பெட்ப
லுரியநின்மனத் தவாநிரம் புறத்தர லுவந்தேன்
வரிவிலங்கையாய் கேண்மதி யெனச்சனி வகுத்தான் 18.

இன்றுதொட்டுநீ யெனதுநாட் டுறைபவர் யார்க்குங்
கன்றுதுன்பமெள் ளளவினுஞ் செய்வது கருதே
லன்றியுங்கதிர் வெண்மதி யியங்குநா ளளவு
மொன்றுமிச்சக டத்துளே குதன்மனத் துன்னேல். 19.

இவ்விரண்டுமே யன்றியான் பிறிதொன்று மிரவேன்
செவ்வியோயெனத் தசரதன் பணிவொடு செப்ப
வவ்வரங்கொளத் தந்தனன் கொள்கவென் றறைந்தான்
பவ்வ நீரெனவிருள் படுகரு நிறம் படைத்தோன். 20.

அன்னமாற்றமம் மன்னவன் செவிபுக வாண்டு
பன்னிரண்டுறு வற்கடம் பார்க்கினிப் படாதா
லென்னவுன்னியுண் மகிழ்ந்தனன் கை விலாங் கிட்டு
தன்னிரண்டுகை தலைமிசைக் குவித்தனன் றாழ. 21.

சித்தியாவையும் புத்தியோ டன்பர்க்குச் செறிக்கு
மத்திமாமுகன் கலைமகள் பதமனத் தழுத்திப்
பத்தியோடுபற் பலதுதி பவளவாய் பயிலச்
செத்துளாரெனத் தசரதன் சிந்தனை செய்தான். 22.

அன்னதற்பினர்த் தன்னெதி ரிரதமே லமரும்
பொன்னவாவிய பூணணி கருஞ்சுடர் பொருவ
மின்னுமக்கதிர் மகனவாய்க் கேட்டுளம் விரும்பப்
பன்னருஞ்சுவைப் பாடல்சொற் றடியிணை பணிந்தான் 23.

தேனுந்தீஞ்சுவை யமுதமுங்கன்னலுந் திரட்டி
வானும்பூமியுங் கைக்கொளத் துதியென வகுத்தான்
யூனுமுள்ளமு முருக்குமான் மன்னவ வுயிரே
யேனுங்கேண்மதி தருவனென் றருஞ்சனி யிசைத்தான் 24.

காக்குமன்னவ னுரைப்பனீ யென்னிரு கண்ணா
னோக்கநின்றருள் செய்தது மெய்மையே னோற்றுப்
பாக்கியம்பெற யாவுள துறக்கமும் பாருந்
தூக்குநாகர்த முலகமுங் கைதொழுந் தூயோய். 25.

அன்னதாயினு முத்திறத் துலகத்து மமர
மன்னுமாருயிர் வகையெலாந் துன்புற வருத்தே
லின்னதொன்றுமே வரமென விரந்தன னென்றான்
மன்னர்மன்னவன் காரிகேட் டுவந்தெதிர் வகுக்கும். 26.

தேவர்தானவர் மானவர் கின்னரர் சித்தர்
மேவருந்திற லுரகரா தியர்க்கிடர் விளையேன்
பாவருந்துதி நீயிவட் புகன்றது பாடி
யாவனாயினும் வழிபடி லவற்கிட ரியற்றேன். 27.

முரிதிரைப்புனல் படிந்தருங் கடலெனலா முடித்துப்
பரிவினின்றுதி புகன்றெனை வழுத்துவோன் பாவ
விரிவெலாமொரீஇ மேற்கதி நண்ணிட விடுப்பே
னரிமணித்தவி சமர்ந்துயிர்க் குலம்புரந் தாள்வோய். 28.

## வேறு.

நிறம்படு பசும்பொன் னாதியிற் சமைத்து
நிலைப்படு மென்னுரு நிறுத்தி
யறம்படு நெறியி னொழுகுவோ னாகி
யைம்புல வேட்கையி னகன்று
புறம்படு நெறியின் மனம்புகா தடங்கப்
பொருந்திடு நறுமணப் பூவுந்
திறம்படு வன்னிச் செழுந்தழைக் கொத்துஞ்
செழுங்கையா லெடுத்தருச் சித்து 29.

எள்ளுட னுழுந்து கலப்புறச் சமைக்கு
மின்சுவை யடிசிலீந் தெனக்கு
வள்ளியோய் மறையோற் கருந்தனம் வழங்கி
மணிமுகில் பொருமெழின் மகிட
முள்ளுவந் தவனுக் களித்துநெஞ் சுருக
வுன்றுதி புகலுமே லொருவன்
தெள்ளுதி துயரங் கோசரந் தனினுந்
திசையினு மவற்கியான் செய்யேன். 30.

மற்றியா னன்றி யேனை யெண்கோளும்
வந்துமற் றவனுயிர் வருத்தா
சொற்றவா தியற்றி யுலகொரு மூன்றுந்
துன்பநீங் குகவெனச் சொன்னான்
வெற்றிசேர் சனியவ் வேந்தனுந் தனது
வேட்கைமுற் றியதென விழைவா
லுற்றமர் மந்தன் றிருவடி வணங்கி
யுவந்துதன் றிருநக ருற்றான். 31.

உள்ளகம் வெதுப்புந் துன்பொரீஇச் செங்கோ
லுவப்பொடுந் தசரத னோச்சி
விள்ளரும் பயன்பெற் றுய்ந்தன னறவீர்
மேதகு குணிசனி மேலோர்
தெள்ளிடு மந்தன் சாயையுண் மகிழுஞ்
சிறுவன்மார்த் தாண்டனார் செல்வன்
றள்ளருஞ் சௌரி பாதகி கிரகந்
தமக்கெலா மொருபெருந் தலைவன். 32.

அரும்பிரா மணியன் குருரமாந் தொழிலோ
நணியுநீ லாம்பரத் தண்ணல்
கரும்படி வத்தோ னென்றுபன் னிரண்டாக்
காட்டிடுஞ் சனிபெயர் கதிரோன்
பெரும்புவ னத்து ளிருள்குடித் துதையப்
பிறங்கல்சேர் புலரியிற் பேசின்
விரும்புபன் னிரண்டு சென்மமெட் டென்ன
விளம்பிடு பவனத்துண் மேவி. 33.

நின்றிடு மேனுங் கடுங்கதிர் மதலை
நிகழ்பதி னொன்றுற நின்றாங்
கொன்றிடு நலமே யொழிவுறா துதவு
மொழிந்ததீ யிடங்களி னுறினு
நன்றுதந் தளிக்கும் புலப்பகை கடிந்த
நான்மறை யந்தணீர் ஞாலத்
தென்றுமாங்க வனுக் கச்சமொன் றின்றா
மெனமுனி சூதனாங் கிசைத்தான். 34.

துதி.

கருநிறம் படைத்தாய் போற்றி
காளமுண் டிருண்ட கண்டத்
தொருவனே நிகர்ப்பாய் போற்றி
யூனகன் றுலர்ந்த யாக்கைத்
திருமலி செல்வ போற்றி
செறிசடைக் கற்றை யோடு
வருமுகத் துரோமந் தாங்கி
மன்னிய தெய்வம் போற்றி. 35.

நாட்டநீண் டகன்று தோன்று
நலம்படு முகத்தாய் போற்றி
யீட்டெழில் வயிறு சுட்க
மெய்த்திய வுருவாய் போற்றி
வீட்டரும் பயம்வி ளைக்கும்
மெய்ப்பொலி வுடையாய் போற்றி
பாட்டினுக் கடங்கா வீரம்
பயின்றசெங் கண்ணாய் போற்றி. 36.

பருத்தெழு முரோம ராசி
பல்கிய வுடலாய் போற்றி
வருத்திடு பசிநோய் நீங்கா
வான்சிறப் புடையாய் போற்றி
திருத்தியெட் டுணையு மின்றிச்
சிறந்திடு தெய்வம் போற்றி
யுருத்துநீண் டிலங்கு மேனி
யொருபெருங் கடவுள் போற்றி. 37.

வற்றிய வுடலாய் போற்றி
வக்கிர தந்த நீண்டு
முற்றிய பவளச் செவ்வாய்
முளைத்திடு முகத்தாய் போற்றி
செற்றிய குரோதஞ் செய்து
சிவந்திடு தெய்வம் போற்றி
யுற்றவ ரஞ்சி நோக்கா
துயங்கிடு மூர்த்தி போற்றி. 38.

வருத்திடு கோர மேனி
வானவ போற்றி வான்மே
லுருத்திர னாவாய் போற்றி
யுலகுளோ ரஞ்சி யஞ்சிக்
கருத்தழி கடவுள் போற்றி
கராளநே ருருவாய் போற்றி
யருத்தியின் யாவு முண்ணற்
கமர்ந்திடு முளத்தாய் போற்றி. 39.

திரையக லாதி லங்குந்
திருமுகத் தேவே போற்றி
நிரைபடு கதிரோ னுள்ள
நெகிழ்விக்கு மதலை போற்றி
தரைவரு முயிருக் கச்சந்
தரும்பெருந் தலைவ போற்றி
புரைபடு கீழ்நோக் கோடு
பொலிவிழிப் புனித போற்றி. 40.

யாவையும் விருத்தி செய்யு
மிறைமையாய் போற்றி போற்றி
பாவையுங் கடக்குஞ் சீர்த்திப்
பயன்பெறு மந்த போற்றி
சேவைசெய் மூன்று பத்தாச்
செறிந்தபா கத்தாய் போற்றி
சாவையெய் துநர்போற் சாம்பித்
தளருடற் சாமி போற்றி. 41.

யோகமே பயின்று நாளு
முள்ளுகந் திடுவாய் போற்றி
மோகமுற் றகன்ற ஞான
முதன்மைமுற் றுடையாய் போற்றி
வேகமுற் றகல வாட்டி
வெம்பொறி வலிய டக்கும்
வாகமர் காசி பன்செய்
மாதவப் புதல்வ போற்றி. 42.

உள்ளநீ மகிழ்தி யாகி
லுலகர சாளச் செய்வாய்
வள்ளனீ வெகுளு வாயேன்
மண்ணவ ரசுரர் தேவர்
நள்ளுசீர் சித்தர் மற்று
நவிற்றுகந் தருவர் நாகர்
விள்ளருந் துன்ப மூழ்க
மீட்டது கவர்வாய் மேலோய். 43.

மரைமலர்ப் பொகுட்டு வாழு
மறையவன் வானோர் மன்னன்
நிறைதவ முனிவ ராக
நிகழ்த்திடு மெழுவர் யாருங்
குறைமனங் கொளினீ வாழ்வு
குன்றுறக் கவலை கூர்வார்
அறைகுவ தரிய தாமு
னடல்வலி யடிய னேற்கே. 44.

கெடுப்பது கருது வாயேற்
கிரகநா யகநீ கேட்டி
வடுப்படுந் துன்ப மூழ்கி
மன்னரும் வாழ்வி ழப்பார்
மடுப்பயில் கழனி நாடு
மாடநீ ணகரு மூரும்
விடுப்பருந் தானை தானும்
வீவது திண்ண மேலோய். 45.

கருங்கடல் யாறு தீவு
கண்ணகன் றுறக்க மண்ணா
டொருங்கழிந் திடுமுன் னுள்ளத்
தொருசிறி திரங்கி டாயேற்
பெருங்கவின் றருமெய்ச் செல்வப்
பேறியா வையும்பெற் றுய்யத்
தருங்குணக் குன்ற மன்னோய்
தமியனேன் றுயர்த விர்த்தி. 46.

முற்றிற்று.

அன்பு நெஞ்சங்களுக்கு,

## ஒரு சிறிய தகவல்

ஓராண்டைப் பூர்த்தி செய்துள்ள சைவநீதி உங்களைப் பெருமிதத்துடன் நிமிர்ந்து பார்ப்பதைப் புன்னகையுடன் வரவேற்கிறீர்கள் பெருமை அடைகிறீர்கள் என்பதை யாம் உணர்கின்றோம். வளர வளரப் பராமரிப்புச் செலவும் பெருகும் என்பதை நீங்கள் அறிவீர்கள் என்பதை யாம் அறிந்தது தான். ஒவ்வொருவரும் சந்தாதாரராகி உதவ விரும்புகின்றீர்கள் என்பதும் எமக்குத் தெரியும்.

| | |
|---|---|
| இலங்கையில் வருடச்சந்தா | ரூபா 200/- |
| ஏனைய நாடுகளில் | US $ 15 அல்லது<br>10 ஸ்ரேலிங் பவுண் |

அனுப்ப வேண்டிய முகவரி

**C. NAVANEETHAKUMAR**
**42, Janaki Lane**
**Colombo - 04**
**Sri Lanka**

Reg. No: QD/66/ News 98. இவ் விதழ் சைவநீதி நிறுவனத்தினரால் 48B, புளூமன்டோல் வீதி, கொழும்பு – 13. என்னும் முகவரியிலுள்ள யுனி ஆர்ட்ஸ் இல் அச்சிட்டு 1998–09–26 இல் வெளியிட்டப்பட்டது.


JB 641